ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விதி.

மலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தியரு மாசி மீ 16உ (28—2—1932) | மலர் 44

பலமுள்ளவீரபுருடனுக,

சுமாரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, பத்தர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியத்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கொர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலகதில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சாயப்பு பஹிஷ்டையாகும். கொர்பபாசயம். இனப்பை இயற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி ஸுகாப்பம உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மதிக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் காகரப்பு, குலை எரிவு, வாயில ஜலம் ஊரல், நெஞ்சரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காலரோகிகம், மயக்கம், கை கால் குடைச்சல். முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு தொந்தரவுகளையும் போக்கும்

பல்வித பழச சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

மலாய் காட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்
கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

எல்லா மருந்துகளுக்கும் பாகிங் தபால் செலவு பிரத்தியேகம். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.



தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொரு வரும் தாராளமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அட படியானால் ஒரு ரிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி
வடக்குவீதி திருவாரூர் S. I.

Read.
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

ஜோதி முத்து.

டாக்டர், B. A. எதிராஜுலுவினால், தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட கோஷாயி மேக எண்ணை (கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப் பெற்றது.)

வெட்ட வாய்வு, (அஷ்ட்ட) எட்டு விதங்களாக கப்பலிந்து ஸ்தானங்களில் தங்கி, சந்ததியார்களுக்கு ஜெனித்த தடிப்பு, கிட்டைகள் முதலிய மேகம் 21-கும் இரண குஷ்டம் 18ம் 3நோம் நம் கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7-வது நாளே எல்லா உபத்திரவங்களிலிருந்து விலகி, 15-வது நாள் பாலிய தேச சடன் விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்று வருவது பிரத்தியட்சம்.

3. நோம் உப்யோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1-க்கு ரூ. 7—0—0 பத்திய விபரம், மருந்து தடன், பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பி வைக்கவும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.
2½ X 5 கீ. கம்பிக்கரைபட்டு ரூ. 1-8
ஷைகுண்டஞ்சகரைடஜன் 1க்கு 15-0
No. 2 டஜன் 1க்கு 12-0
3 X 8 கீ. பட்டு கேஷ்டி 1க்கு 3-8
S. K. R. வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சுத்தானந்தம்,
"சன்மார்க்கன்" பழனி.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை பத்தாக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விரும்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

தக்ளியில் நூல் நூற்று சுயாராஜ்யம் பெற்ற தேசங்கள் எத்தனை?

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'தமிழன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
கண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'
வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0.
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிங்கிசோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"
வாரப் பதிப்பு.
ஆசிரியர், ச. ம சி. பரமசிவம்.
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா. ரூ. 1—8—0
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர் - திருச்சி.

'குமரன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு:
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா.

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1930ம் வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

புதுவைமுரசு

ஆசிரியர்-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் ஒவ்வொரு மைதோறும் வெளிவரும் சுயமரியாதைச்செந்தமிழ்வாரப் பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 4.
மாதிரிபிரதி இலவம்!

மானேஜர்,
"புதுவைமுரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

(The Work before us)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

மதங்களும், அரசியலும்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(VII)

பூர்வ காலந் தொடங்கி, அந்தந்தக்காலத்து அரசியல்களை, மதங்களை ஆதரித்து வந்திருக்கின்றன. மதங்கள் பரவியதற்கும் அரசியலே காரணம். "அரசன் எவ்வழியோ அவ்வழியேகுடிகள்" என்றமுதுமொழி மதங்களுக்கும், அரசுகளுக்கும் உள்ள சம்பந்தத்தை விளங்க உரைக்கின்றது. இதனை ஆதி சாஸ்திர ஆராய்ச்சி மூலமாக நிரூபிப்பாம்.

காட்டு மிராண்டி (Savages) மந்திரக்காரன் தான், தலைவனாக மதிக்கப் பட்டிருந்தான். மந்திர தந்திரத்தில் வல்லவனே, நாகரீகமில்லாத காலங்களில், அரசனாகவும், சேனைத் தலைவனாகவும், ஆதிக்க முடையவனாகவும், அந்தந்தஊர் அரசியல் நிர்வாகங்களை நடத்தி வந்தான். இந்தக் காட்டு மிராண்டிப் பழக்கம் இன்றைக்கும் நமது நாட்டை ஆளும் அரசர்கள் முடிவில், டையு எ மாருந்துருவா, (Diew et Mon Droit) அதாவது "கடவுளும் என்னுடைய ஆட்சியும்" என்று எழுதப் பட்டிருப்பதைக் காணலாம். பண்டை கால அரசுகள் யாவும், கடவுளருளால் அல்லது ஆக்கினையால் பெறப்பட்டதென்பதே, அரசியல் திட்டத்தில் முதன்மையான சித்தாந்தம். மத்திய காலத்தில் (Middle ages) பல அரசர்கள், தங்களுடைய ஆட்சியை கடவுளுடைய ஆட்சி என்றே வாதித்து வந்தனர். பதினைந்காம் லூயி (Loui the fourteenth) பிரஞ்சு தேசத்தை கடவுள் உத்தரவு பெற்று அரசு புரிவதாகத் தன் பிரஜைகளுக்குத் தெரிவித்து வந்தான். ஸார் (Czar) சக்கர வர்த்திகள், ரஷ்யாவில், தம்மைச் சிறிய பிதா (The Little Father) வென அழைக்கப்பட்டு வந்தனர். அதாவது, பரலோகத்தில் உள்ள கடவுள் பெரிய பிதா வென்றும், தாம் சிறிய பிதா வென்றும் வழங்கி வந்தனர், ஆங்கில தேசத்தை ஆண்டு வந்த பிரஞ்சு அரசர்கள் யாவரும் தாங்களும் கடவுளும் ஒன்றெனவே எண்ணும்படி அரசு புரிந்து வந்தனர்.

கிருஸ்து மார்க்கம் எற்பட்டது முதல், ஸெண்ட் பீடர் (Saint Peter) முதல், இவ்வுலகை அரசு புரிந்த போப்புகள் (Popes) எல்லோரும், இவ்வுலகை ஆளும் கடவுளென்றே (God on earth) எண்ணி வந்திருக்கின்றனர் இன்றைக்கும் கத்தோலியர் ஆட்சியை ஓலீஸீ (The holy sea) என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. பல நூற்றாண்டுகளாக, ரோமாபுரியில் (Rome) போப் அவர்களே, பல சிற்றரசுகளை நியமிக்கவும், தள்ளவும், ஆதிக்கம்பெற்றிருந்தனர். இன்றைக்கும், போப்புக்கும், முஸ்ஸோலினிக்கும் உண்டாயிருக்கும் வித்தியாசங்கள், இந்த ஆட்சி முறையைக் குறித்ததென அறிக.

கிறிஸ்துவ நாடுகளில், அரசர்களுக்கு முடி சூட்டுகின்றவர்கள், மதக்குருக்களே. சீர்மையில் (இங்கிலாந்தில்) மன்னர்களுக்கு முடி சூட்டுகின்றவர்கள், காண்டர்பரி ஆர்ச்பிஷப்புகளே. ஐரோப்பாதேசங்களில் பல ஊர்களில் அரசை மத ஆட்சியிலிருந்து விலக்கப் பட்ட போதிலும் (Seperation of church and state) அந்தரகமாக, மதத்தின், ஆதிக்கத்தை ஆதரிக்கும் பல கோடி பிரஜைகள் இருந்து வருகின்றார்கள்.

நமது இந்திய நாட்டிலும், இந்து சுயேச்சை மன்னர்கள், பிராமண செல்வாக்கை ஆதரித்து வந்தமையால் தான், இன்றைக்கும் இந்து மதம், பிராமண ஆதிக்கத்திற்குட் பட்டிருக்கின்றது. பண்டைக்கால முதல், மத குருக்களே, அரசாங்கங்களில் மந்திரிகளாக இருந்து வந்திருக்கின்றனர், பாரத, ராமாயண காலங்களில், பிராமணர்களாகிய மதரிஷிகள், அரசியலில், எவ்வளவு செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள் என்பதை எளிதில் அளந்துப் பார்க்கலாம்.

அந்தக் காலத்து பிராமண ரிஷிகளின் செல்வாக்கை அறிந்து கொள்ள வேண்டுமென்போர், அயோத்தி நகரத்தில், தசரத சக்கர வர்த்தியின் ராஜ சபையில், ரிஷிகள் வகித்திருந்த ஆதிக்கத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். பிராமண ரிஷிகளுக்கு, நமது நாட்டு அரசர்கள் அடிமைகளாகவே இருந்து வந்தனர், இந்தக் காட்சியை இன்றைக்கும், திருவாங்கூரிலும் சையாமிலும், (Siam) கண் காட்சியாகப் பார்க்கலாம்.

சரித்திர கால முதல் (Historic period) அரசன் எந்த மதத்தைத் தழுவி வந்தானே, அந்த மதத்தையே அவன் குடிகளும் ஆதரித்து வந்திருக்கின்றனர். 2000 வருஷங்களுக்கு முந்தி நமது இந்தியாவில் அசோக சக்கரவர்த்தி, புத்தமதத்தைத் தழுவிய பிறகே, புத்த மதம் நாடு முழுமையும் பரவ ஆரம்பித்தது 1500 வருஷங்களுக்கு முன், ரோமாபுரியில் அரசாண்ட கான்ஸ்டான் டைபன் (Constantine) சக்கர வர்த்தி கிருஸ்த மதத்தைக் கையாண்ட பிறகே, அம்மதம் ஐரோப்பாதேசங்களில் பரவ ஆதிக்கம் பெற்றது. இந்தியாவில் மகமதிய மதமும், கிறிஸ்துவ மதமும் பரவியுள்ளதற்குக் காரணம் அந்தந்த மதத்தைத் தழுவிய அரசுகள் நமது நாட்டை ஆண்டுவந்தமையாலென அறிக.

அரசியலில் இருந்து, மதச் செல்வாக்கை ஒழித்துள்ள ஊர்களில், மதம் ஆதரிக்கப் பட்டிருப்பதற்குக் காரண மென்ன வெனில் அரசு புரிந்து வரும் தலைவர்கள் மதப் பற்றுடையவர்களாதலால் நாஸ்திகம் பரவ இடமில்லாமலிருந்து வருகின்றது. இஸ்பெயின் தேசத்தில் (Spain) மதஸ்தாபனங்களை அரசாங்கம் கைப்பற்றியும், மதம் நிலைத்தே வருகிறது. அங்கு தற்கால அரசியல் தலைவர்கள் சொத்துக்கு ஆசைப் பட்டார்களே யொழிய, மூடநம்பிக்கைகளைப் போக்க முயற்சித்தார் ஒருவருமில்லை, பிரான்ஸ் தேசத்திலும் (France) பாதிரிமார்களை ஊரை விட்டுத் துரத்தவும், அவர்கள் கற்பனைகளை, மனிதர்களின் உள்ளத்திலிருந்து துரத்தப் பிரயாசைப் பட்டார் யாருமிலர். இது தான் உலகிலிருந்து மதத்தைப் போக்குவதற்குள்ள கஷ்டம். அரசியலே நடத்துகின்றவர்களுக்கு மதங்களை ஆதரிப்பதற்கு ஒரு பெருத்தகாரணமுண்டு, மதங்களை அனுசரிப்பது, ஒரு பெரிய பொருளாதார செல்வாக்கை அளிக்கின்றது. அரசியலில் செல்வாக்குடையவர்கள் யாவரும், பொருளாதார செல்வாக்கைப் பெற்றுள்ளவர்கள் இவர்களை ஆதரிப்பவர்களில், பெரும்பான்மையோர், மதப்பற்றுடையவர்கள். இவர்களுடைய ஆதரவின்றி, அரசியல் அதிகாரிகளுக்கு ஆதிக்கம் வலுத்து வராது. ஆதலின் அரசியல் அதிகாரிகளுக்கு மதக்கற்பனைகளே, ஆதரவாக இருந்து வருகின்றன.

மதங்களை அரசியல் அதிகாரிகள் ஆதரிப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. மதப்பற்றுடையோருக்கு பகுத்தறிவு அதிகமிராது, இவர்கள் தங்கள் பகுத்தறிவை பூரணமாக உபயோகிப்பார்களானால், அதிகாரிகளுடைய சூழ்ச்சிகளை வெகு சுலபமாக அறிந்து கொள்ளலாம். பாமர ஜனங்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் வரை, அவர்கள் மூட்டத்தனத்தைக் கொண்டு அதிகாரிகள், தங்கள் ஆதிக்கத்தை நிலைக்க வைத்துக் கொள்ள இடமுண்டு. இதன் நிமித்தமாகவே, அதிகாரிகள் மதஸ்தர்களைத் தெளிவு பெறச் செய்ய இடம் கொடுப்பதில்லை.

உலகம் மூடத்தனத்தில் இருந்தால் தான், கொள்ளைக் காரர்களுக்கு லாபம், மூடத்தனத்தை அதிகரித்து வரும் ஸ்தாபனங்களில் மதம் முக்கியமானது, இதனைத் தழுவியும், ஆதரித்தும், வந்தால் தான், மூடத்தனம், உலகில் தழைத்தோங்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அதிகாரிகள் தங்கள் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும்பெருக்கிக் கொள்ள முடியும். இந்தப் பொருளாதார அனுகூலத்திற்காகவே, அதிகாரிகள், "மத நடுநிலைமை" என்றும் மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லை என்றும், இன்னும் பல சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொண்டு, நாளைக் கழிப்பதென அறிக. அந்தந்த அரசாங்க ஆதரவாலேயே, அந்தந்த மதங்கள், அந்தந்த ஊர்களில் நிலைத்து வருகின்றன. முற்காலத்தைப் போல, அரசுகள், மதங்களை வெளி முகமாக ஆதரிக்கா விடினும் 'மதநடுநிலைமை' என்ற கற்பனையை சிருஷ்டித்துக் கொண்டு, அதன் நிழலில் இருந்து கொண்டு, மதங்களை ஆதரித்து வருகின்றன,

மதங்கள், மதகுருமார்களுக்கும், அவர்களை அடுத்தோருக்கும், பல விதத்தில் அவர்கள் ஜீவனத்திற்கு அநுகூலமாகவே இருந்துவருகின்றன. அரசு செலுத்தும் அதிகாரிகளுக்கு அரசுபுரிவதால் எவ்வளவு செல்வாக்கு கிடைக்கின்றனவோ, அவ்வளவு செல்வாக்கும், ஆதிக்கமும், மதகுருமார்களுக்கு மதப்பற்றால் உண்டாகின்றன. நமது தேசத்தில் மத ஆதரவில் பிழைத்துவரும் மடாதிபதிகள் எத்தனை? குருக்கள் எத்தனை? பூசாரிகள் எத்தனை? மந்திர தந்திரக்காரர்கள் எத்தனை? பண்டாரங்கள் எத்தனை? சோம்பித்திரியும் சந்நியாசிகள் எத்தனை? பைராகிகள் எத்தனை? பிச்சைக்காரர்கள் எத்தனை? இவர்கள் ஒருபக்கமிருக்க கோயில் ஸ்தாபனங்களாலும், மடஸ்தாபனங்களாலும், பிழைப்போர் எத்தனை? தர்மகர்த்தர்கள் எத்தனை? கோவில் சிப்பந்திகள் எத்தனை? மேளகாரர் புஷ்பக்காரர், பாணவேடிக்கைக்காரர், பால்காரர், தயிர்க்காரர், பழக்காரர், எத்தனை? இதுவும் போதாமல் வாகனங்கள் செய்வோர் எத்தனை? குடைகள் செய்வோர் எத்தனை? கோவில் மராமத்து செய்வோர் எத்தனை? புதியகோவில்களும், சமாதிகளும் கட்டுவோர் எத்தனை? நமது தேச முழுமையும் பழைய கோவில்கள் இடிய, இடிய புதுக்கோவில்கள் கட்டப்பட்டே வருகின்றன! மதத்தால் பிழைக்கும் நமது நாட்டு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

பண்டிதர் பகுத்தறிவு.

[சாமி. சிதம்பரனார்]

வைதீகர்களும், பண்டிதர்களும் பகுத்தறிவற்றவர்கள்: அவர்கள் தாங்கள் மனத்தில் வைத்திருக்கும் மூடநம்பிக்கைகளே யேசரியான தென்றும், "தெய்வத்தன்மை" யானதென்றும் கண்ணேமூடி நம்பிக்கொண்டு வாழ்கின்றவர்கள், என்பது நமது அபிப்பிராயம். அதிலும்கலாசாலைகளில் ஆசிரியர்களாக இருக்கும் இத்தகைய பண்டிதர்கள், மாணவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு, அவர்கள் கேட்கும் பகுத்தறிவுள்ளகேள் விகளுக்குப்பதில் சொல்ல முடியாமல் திண்டாடுவதையும், இக்காரணத்தால் இவர்கள், மற்றஉபாத்தியாயர்கள் கோஷ்டியில் சேராமல் தனிப்பிராணிகளாக மதிக்கப்படுவதும், கலாசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தெரிந்த விஷயமாகும். இதற்கு உதாரணமாக ஒரு விஷயத்தை இச்சமயத்தில் எடுத்துக்காட்டவிரும்பு கிறோம்.

சுயமரியாதை இயக்கத்தின் உண்மைக்கொள்கைகளே யுணர்ந்து,அதைப்பின்பற்றும், இளைஞர்களும் அறிஞர்களும் நிறைந்த ஊரில், ஒருஉயர்தரக்கலாசாலையில் தமிழ்பண்டிதர் வேலைபார்த்து வரும் ஒருவைதீகர், ஒருவகுப்பில் பாடம் போதிக்கும் போது, அவ்வகுப்புப் பாடபுத்தகத்தில், "பெண்களும் ஆண்களும் தத்தம்மனதிற்கேற்ற ஆண் பெண்களே மணந்து கொள்ளுவதே நன்மையாகும்" என்றகருத்தைப் போதிக்கும் கதைச்செய்யுளை நடத்தும்போது, அவர்மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட உபதேசத்தைச், செய்தாராம் அது வருமாறு:- பெண்மக்களாவது ஆண்மக்களாவது, தங்கள்தங்கள் கருத்திற்கேற்றவாறு மணம் செய்தல் நீதாகும் ஏனென்றால் தத்தமக்கு ஏற்ற வாறு பெண்கள் ஆண்களையும், ஆண்கள் பெண்களையும் தேர்ந்தெடுத்து மணம்புரிந்து கொள்ளுகின்ற மேல் நாடுகளில் தான் இன்றுவிவாகரத்துக்கள் அதிகப்பட்டிருக்கின்றன. ஆனால் தாய்தந்தையர்களின் விருப்பப்படி தங்கள் புதல்விகளுக்கு மணமகனைத்தேர்ந்தும், புத்திரர் களுக்கு மணமகளைத்தேர்ந்தும் எடுத்து விவாகம்நடத்துகின்ற நம்நாட்டில் தான் விவாகரத்துகிடையாது. ஆதலால் பெண்களாவது ஆண்களாவது தம் விருப்பப்படி விவாகம் புரிந்துகொள்ளுதல்கூடாது.

மற்றும் பெண்கள் ஆண்மக்களுக்கு அடிமை யென இயற்கையிலேயேதெரிகிறது. ஏனென்றால் ஒருபெண்ஒருஉத்தியோகத்தில் அமர்ந்திருந்தாளாயின், அவளுக்குக் கர்ப்பம் தரித்திருக்கும்காலத்தில் அவளால் அவ்வேலையைப்பார்க்கமுடியாமல்போகிறது. ஆதலால் அவர்கள் பிள்ளைபெறக்கூடியவர்களாகவே யிருக்கமுடியும். அவர்கள் தங்கள்புத்திரர்களை வீரமுடனும் நற்குணமுடனும் வளர்ப்பதைவிடவேறுகடன்யாது.

என்ற விஷயங்களை அந்தப் பண்டிதர்சொல்லி பெண்களுக்குச்சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்றாராம். இந்தப்பண்டிதரின் அறிவு விசாலத்தையும் ஆராய்ச்சித்திறனையும் கண்டுநாம்வியப்படைகிறோம். பெரும்பாலும் வைதீகத்தன்மை யுடைய ஆங்கிலம் படித்தபண்டிதர்களும், தமிழ்பண்டிதர்களும், சமஸ்கிருதம் முதலியமற்ற பாஷைகளைப்படித்த பண்டிதர்களும் இந்தஅபிப்பிராய முடையவர்களாகத்தான்இருக்கிறார்கள். ஆகையால்இவர்களைப்பற்றி நாம் கவலைப்படாமல் இவர்களால் போதிக்கப்படும் மாணவர்களுக்கு உண்மை உணர்ச்சி ஏற்படும்பொருட்டு, இவர்கள் கொண்டிருக்கும் மூடக்கருதின்போலித்தன்மையை விளக்கிக்காட்ட விரும்புகிறோம். முதலில், அவர்கூறிய "காதல்மணத்தால்தான் விவாகரத்து ஏற்படுகின்றது, பலவந்த மணத்தால்விவாகரத்துஏற்படுவதில்லை. என்று கருத்தடங்கிய அபிப்பிராயத்தை ஆராய்வோம்.

மேல் நாட்டில்காதல் மணம்ஏற்பட்டபிறகு விபசாரம் குறைந்துவருகிறதென்பதை யாவரும்மறுக்கமுடியாது. ஒருநாட்டிற்குத் தீமைவிளைவிப்பதுவிபசாரமே ஒழியவிவாகவிடுதலையல்ல. அன்றியும் இந்தப் பண்டிதர்கள்நினைப்பது போல, மேல்நாடுகளில்காதல் மணம் செய்துகொண்டவர்களெல்லாம், விவாகவிடுதலைசெய்துகொள்வதில்லை. "ஒருவர் குணம், செய்கை, நடத்தை முதலியவைமற்றவர்களுக்குப்பிடிக்காத போதுஅவர்களைவிட்டுப்பிரிந்து வாழ்வதே சிறந்தவாழ்க்கையாகும்' என்றஉயரியகருத்து மேல்நாட்டாரிடம் அனுபவத்திலிருப்பதால் அவர்கள் விவாகவிடுதலையை அனுமதித் திருக்கிறார்கள். காதல்மணத்திற்கு இடங்கொடாமலும், விவாகவிடுதலைக்கு அநுமதிக்காமலுமிருக்கின்ற நமது நாட்டின் நிலைமையை எடுத்துப்பாருங்கள்! தாய்தந்தையரின் வற்புறுத்துதலினால் மணஞ்செய்து வைக்கப்பட்ட தம்பதிகளில் நூற்றுக்குபத்து பேர்கள்தான் ஒற்றுமையான வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கமுடியும். மற்றதொண்ணூறுபேர்கள், ஒற்றுமையின்றி, மனச்சமாதானமில்லாமல், உண்மையன்பில்லாமல்,வாழ்க்கைநடத்திக்கொண்டிருக்கிறார்கள்என்றே சொல்லலாம். இந்தக் காரணத்தால், ஆண்மக்கள் பலர் பகிரங்கமாகவும், மறைவாகவும் விபசாரம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர். பெண்மக்களிலும்பலர் திருட்டுத்தனமாக விபசாரவாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். இந்து மததம்பதிகளிடமிருக்கும், விபசார்வாழ்க்கையும் துர்நடத்தையும், வேறுஎந்த நாட்டினரிடத்தும், எந்தமதத்தினரிடத்தும்இல்லையென்று நாம் துணிவாகச் சொல்வோம்.

கிறிஸ்தவர்கள், பெண்ணும்,பிள்ளையும் சம்மதித்த பிறகேமணம்செய்துவைக்கிறார்கள். முஸ்லிம்களும் இருவருடைய சம்மதத்தையும் அறிந்தபின்னரே மணஞ்செய்து வைக்கிறார்கள். முஸ்லிம்கள் கணவன் மனைவிகளுக்குள்ஒற்றுமையோடு வாழமுடியாத மனத்தாங்கல் ஏற்பட்டால் விவாகவிடுதலை செய்துகொள்ளவும் அநுமதியளிக்கின்றார்கள். இக்காரணங்களால் இந்துசமூகத்தைக்காடிலும், கிறிஸ்தவ, முஸ்லிம் சமூகத்தில் உள்ளவர்களின்வாழ்க்கை எந்தவகையிலும் குறைந்துபோக வில்லை. பலவகையிலும் ஒற்றுமையில்லாமலும், சோற்றுக்குவழியில்லாமலும், அடிமையாக, நெல்லிக்காய் மூட்டைகளைப்போல் வாழும் இந்துக்களைவிட அவர்கள்வாழ்க்கை எவ்வளவோ சிறந்ததாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கின்றது. இதுபோலவே மேல்நாட்டினருடைய வாழ்வுமிருக்கிறது.

காதல் மணம் இல்லாமையாலும், விவாகவிடுதலை செய்து கொள்ளும் உரிமையில்லாமலும், பலவந்தமணம் செய்துவைக்கப்படுவதனாலும் நேரும் கெடுதிகள் இந்துசமூகத்திற்கு வெட்கத்தைத்தரத்தக்கன வாயிருக்கின்றன. ஆண்மகன், தன் விருப்பப்படி எத்தனை மனைவியை வேண்டுமானாலும் மணஞ்செய்து கொள்ளுகிறான். பெற்றோரால், புரோகிதரால், புரேகிதச்சடங்குகள், தேவர்கள். சாட்சியாகமணம் செய்யப்பட்ட மனைவியை நீக்கிவிடுகிறான். ஆனால் இதுபோன்ற உரிமை மனைவிக்கு இல்லாமையால் அவள்தற்கொலை செய்து கொண்டு சாகவேண்டியிருக்கிறது. அல்லது விபசாரம் செய்து பிழைக்கவேண்டியிருக்கிறது. இத்தகையமானங்கெட்டவாழ்க்கைவேறு எந்தமதத்தில், எந்தசமூகத்தில் எந்த நாட்டில் இருக்கின்றது என்று கேட்கின்றோம். உண்மையாகவே காதல் மணம் நடைபெறுமானால் இத்தகையதுன் பங்களும், மானக்கேடான செயல்களும் நிகழவேநிகழாது என்று உறுதியாக நம்பலாம்.

அன்றியும், ஆரியர்களுடையஎண்வகைமணங்களில் ஒன்றுகிய கந்தருவமணத்தைப்பற்றியும், தமிழர்மணமுறையில் சிறந்ததாகிய "களவி" என்னும்காதல்மணத்தைப் பற்றியும்இந்தப்பண்டிதர்கள் என்ன சொல்லுகிறார்கள்? காதல் மணத்தின் பெருமையையும், அத்தம்பதிகளின் மனமொத்தவாழ்க்கையைப் பற்றியும் புகழ்ந்து கூறப்படும், தொல்காப்பியம் இறையனர்அகப்பொருள் முதலியவைகளைப் பற்றி இவர்கள் என்னநினைக்கிறார்கள்? பண்டைக்காலத்தில் அரசர்களுக்குள் நடைபெற்ற 'சுயம்வரம்" என்னும் காதல் மணம்செய்து கொண்டவர்களெல்லாம் விவாகவிடுதலைதான் செய்து கொண்டார்களா? இன்னும் இந்தப்பண்டிதர்களிலுல், உண்மையானவையென்றும் 'தெய்வீக" த்தன்மை வாய்ந்தவை யென்றும் பாராட்டப்படும், காரியங்களிலும், புராணங்களிலும் வருகின்ற கதைகளில் எங்கேனும், ஆண் பெண் சம்மதமில்லாமல் மணம் நடைபெற்றதாகக்கூறப்பட்டிருக்கின்றதா என்றுகேட்கின்றோம். ஆகையால், வற்புறுத்திமணஞ் செய்யப்பட்டு, ஆண்களும், பெண்களும்விபசாரஞ் செய்து, ஒற்றுமையின்றிவாழும் மானங்கெட்ட வாழ்க்கையைக்காட்டிலும், இருவருமனமொத்து மணம்புரிந்து கொள்ளுதலும், ஒற்றுமையடைய முடியாதமனத்தாங்கல் ஏற்பட்டபோது விவாகவிடுதலைசெய்து கொண்டு, வேறுமணம்புரிந்து கொண்டு வாழ்வதுமே சிறந்தவாழ்க்கையாகும் என்பதைப் பற்றிபகுத்தறிவுடையவர்கள் எவரும் ஒப்புக்கொள்ளுவார்களென்பதில் ஐயமில்லை. அன்றியும், காதல்மணமில்லாமல், வற்புறுத்தி மணஞ்செய்யப்படும் இந்துசமூகத்தில், நூற்றுக்கு ஐம்பது குடும்பங்களுக்கு மேலாகவே ஒற்றுமையில்லாமலும், சுகவாழ்வு இல்லாமலும், உண்மையான காதல் வாழ்வுஇல்லாமலும், பேருக்குத்தம்பதிகளாக இருந்து வாழ்கிறார்கள் என்றுதுணிந்து கூறலாம். காதல்மணம் விவாக விடுதலையும் உள்ள வேறு சமூகத்திலும், மதங்களிலும், நாடுகளிலும், விவாக விடுதலை செய்துகொள்ளுபவர்கள் நூற்றுக்கு ஒருவருக்குக்குறைவாகவேதான் காணப்படுகிறார்கள் என்ற உண்மையையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

இனி, அடுத்தபடியாக பெண்மக்கள்பிள்ளை பெறுபவர் களாகவும், அடிமைகளாகவும் இருக்கக்கூடிய இயற்கையுடையவர்கள் என்றுநினைக்கும் அபிப்பிராயத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். பெண்களை சூரிய வெளிச்சத்தைக் கூட பார்க்கவிடாமல், அறிவுவளர்ச்சிக்கான விஷயங்களைத் தெரிந்துகொள்ள விடாமல் அடுப்பங்கரைக்குள் அடைத்துவைத்திருந்தகாலத்தில் நமது பண்டிதர்களுக்கூறும் அபிப்பிராயத்திற்கு ஒருசிறிதுமதிப்பு இருந்திருக்கலாம். இந்தக்காலத்தில் இவ்வபிப்பிராயம்முட்டாள்தனமான, பகுத்தறிவற்ற அபிப்பிராயம் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். பிள்ளை பெறும்இயற்கை பெண்களிட மிருப்பதால் அவர்கள் அடிமையாயிருப்பதற்குரியவர்கள்என்ற அபிப்பிராயத்தின் பெருமை வியக்கத்தக்கது! இதற்கும் சுதந்தரத்திற்கும் என்ன சம்மந்தம்? ஆண்உத்தியோகஸ்தர்கள் உடம்புக்குவியாதிவந்த காலததில் ஒய்வுஎடுத்துக்கொள்ளுவது போல, பெண்கள் கற்பத்திலுல் வேலைசெய்ய முடியாதகஷ்டம் ஏற்பட்டபோது ஓய்வுஎடுத்துக்கொள்ளுவதனால் என்னதீங்கு

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

மதங்களும், மன்னரும்.

[திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.,]

II.

காங்கிரஸ் காரர் கைக்கொண்டுள்ளதும் இனி வரும் சுயராஜ்ய அரசாங்கத்தில் கைக் கொள்ளப் போவதும் ஆகிய 'சமய நடு நிலைமை' யென்னும் ஜீவாதார வுரிமையைப் பற்றியும் அது இருவகைப் பொருள்படும் தன்மையது என்றும் மேலே கூறினேம். இதில் முதற் பொருளாகிய சமய விவாதங்களுள்ளும், சமயங்களை வளர்ப்பதுள்ளும் தலையிடாமல் இருத்தல் எனின் நாம் அதை அன்புடன் வரவேற்பதுடன் அதைப் பாராட்டவும் கடமைப் பட்டுள்ளோம். ஏனெனின் அங்கிலே பிரிட்டஷ் அரசாங்கத்தின் நிலையைக் காட்டிலும் சிறந்ததாகும். இங்கிலாந்து அரசு தனக் கென ஒரு மதத்தை ஓம்பி வருவதை யாவரும் உணர்வர். அவ்வாறன்றி நம் தேயத்தில் எல்லா மதங்களும் தத்தம் உண்மைக்கும், சக்திக்கும் ஏற்ற வாறு பரவ விடுத்து அரசு அதில் தலையிடாது இருத்தல் மிகவும் நன்மையுடைய கொள்கையே. ஆனால் இரண்டாவது கூறிய பொருளோ வெனின், அதாவது எந்தக் காரணத்தினாலும் நமது அரசாங்கம் 'மதம்' என்னும் பேரால் அனுஷ்டிக்கப் பட்டு வரும் பழக்க வழக்கங்கள், அவை எவ்வளவு கொடியனவாயினும் அவைகளில் தலையிடல் தவறு என்னுங் கொள்கையாயின், நாம் அதைக் கண்டித்துத் தான் ஆக வேண்டும்.

இவ்விரண்டாவது பொருளே காங்கிரஸ் கொள்கை கொண்டுள்ளது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. திருமதி கமலா தேவி சட்டோபாத்தியாய அம்மை, கமிட்டியில் 'சில காரணங்களை முன்னிட்டு மதத்தில் அரசு தலையிடலாம்' எனக் கொண்டு வந்த திருத்தப் பிரரேபணையைக் காங்கிரஸ் கமிட்டி மறுத்துத் தள்ளி விட்டது. இதுவும் நாம் கருதத் தக்கதே, ஆகவே நம் நிலை எவ்வாறு இருக்கின்றது? நாளையத்தினம் சுயராஜ்யம் வந்து விடுமேயானால், அவ்வரசாங்கத்தில் சமூக சீர்திருத்தக்காரரின் நிலையும் சமூக முன்னேற்றத்தின் கதியும் என்னவாகும்? இது வரைக்கும் இருந்து வந்தது போலவும் இதை விடப் பன் மடங்கும் ஒவ்வொரு சீர்திருத்த மசோதாவிற்கும் மதத்தின் பேரால் எதிர்ப்புகள் எழுந்து கொண்டேயிருக்கும். எவரேனும் ஒருவர் பெண்களின் விடுதலைக்கு விவாஹரத்து என்பது இன்றியமையாதது என்றே, பொதுக்கிணறு, குளம், ரஸ்தா, சத்திரம், கோவில் முதலியவைகளில் ஜாதி பேதம் இன்றி எல்லாக்குடிகளும் உபயோகிக்க உரிமை யுண்டேன்றே, மலே போற்குவித்து வைத்து மனம் போன போக்கில் வாழும் மடாதிபதிகளின் சொத்தைக் கொண்டு தேசத்தில் உணவின்றித் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களின் பசியைத் தவிர்க்கவும், அறிவை வளர்க்கவும் உபயோகிக்கலாம் என்றே, இவை போன்ற சீர்திருத்தம் மசோதாக்கள் கொண்டுவரின், அவற்றை எதிர்த்து சீர்திருத்தம் வேண்டாதார் இச்சீவாதார வுரிமையை யாதரவாகக் காட்டுவரேல், 'சமய நடு நிலைமை' வகிக்கும் நம் அரசாங்கம் அம்மசோதாக்களைத் தள்ளி விடத்தான் நேரிடும். அதனால் வீளையும்கஷ்டங்கள் எவ்வளவு? இது காரணம் பற்றியே தான் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள்இதை வெகு அழுத்தமாகத் தமது தலைமை யுரையில் கண்டித்துள்ளார். மற்றும் காங்கிரஸையே சார்ந்த 'பம்பாய் கிரானிக்கள்' (Bombay Chronicle) என்னும் பத்திரிகையும் கூட இதைக் கண்டித்து இவ்விதம் கூறுகின்றது:—"நாமும் ஒரு அளவுற்ற தேசம் ஆக வேண்டும் எனவும், நாம் முன்னேறும் நாடு ஆக வேண்டும் எனவும், நமக்குப் பேராசை உண்மையில் இருக்குமேல், நமது சுயராஜ்ய அரசாங்கத்தில் கொடிய பழக்கங்கள் இல்லாமல், அப்படியகற்றுதலால் வரும் தீமைகள் எவ்வளவாயினும், அவைகளை வேரறக் களைந்து எறிய வேண்டும்."

இது இவ்வாறிருக்க, உலகில் எனைய தேசங்களையும் முன்னணியில் நிற்கும் நாடுகளையும் பார்ப்போமேயானால் அவைகள் இத்தகைய விபரீதமான 'மதநடுநிலைமை'வகித்து வந்துள்ளதாகத் தெரியவில்லை. நாம் எல்லாத் தேசங்களிலும் அரசாங்கம் பாரபட்சம் இல்லாமலும், மதங்களைப்பரப்பாமலும் இருந்துவந்துள்ளது என்று கூற முன்வரவில்லை. ஆனால் தற்காலம் அன்னியரால்லன்றி தம் நாட்டினரால் ஆளப்பட்டுவரும் தேசங்கள் அத்தனையும் 'சமயம் என்பதின் பேரால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் கொடிய பழக்கங்களை மதத்தின் காரணம் பற்றி யகற்றுமல் இருந்துவிடவில்லை என்றும், சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக 'மதம்' என்பது நிற்க இடம் கொடுத்திருக்கவில்லை யென்றுமே கூறுகின்றோம். இங்கிலாந்து தேசத்தை எடுத்துக்கொள்ளுவோம். எல்லாத் தேசங்களிலும் இருப்பதைப் போல அத்தேசத்திலும் பல ஊழல்கள் இருந்துதான் வந்தன. 'மதம்' என்பது குறுக்கிட்டுச் சமூக சீர்திருத்தத்தைத் தடைப்படுத்தித்தான் வந்தது. ஆனால் முதன் முதல் [Henry VIII.] எட்டாவது ஹென்றி என்னும் மன்னனது தைரியமான செயல்களால் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதுமன்றி மக்களின் அறிவையும், கண் விழிப்பையும் பெருக்கக் காரணமாயிற்று, தான் வேண்டிய விவாக ரத்துக்குப் போப் [Pope] இணங்க மறுத்த போதிலும் தாமே அதைச் செய்து கொண்டார். பின்னர் அம்மன்னர் மடாதிபதிகள் பல்லாயிரம் பேர் ஆண்டும், அனுபவித்தும் வந்த கோடிக்கணக்கான சொத்துக்களை அச்சமின்றிப் பறிமுதல் செய்து ஏழைகளுக்கு வழங்கினர். இன்னும் இது போன்ற பல சீர்திருத்தங்களையும், மத சம்பந்தமான மூடப் பழக்கங்களையும் ஒழிக்கப் பல முயற்சிகளும் செய்தார். அவர் இவ்வாறு செய்ததின் காரணமாகத்தான் ஆங்கிலேயர்கள் நாளடைவில் முன்னேறவும், செல்வம், பலம் முதலியவற்றில் தலை சிறந்து நிற்கவும் ஆயிற்றெனின் அது ஒருபோதும் மிகையாகாது.

ருஷ்யா தேசத்தை யாண்டுவந்த [Peter the Great] மகாபீட்டர் என்னும் மன்னர் தம் தேசத்தில் புகுத்திய சீர்திருத்தங்களும் கவனிக்கத் தக்கவையே. அவர் ஐரோப்பாவில் வழங்கி வந்த பற்பல சீர்திருத்தங்களை 'மதம்' என்பது தடுத்தபோதிலும், தைரியமாகவும், விடாமுயற்சியோடும் தமது தேசத்தில் நுழைத்தார். ருஷ்யதேசத்து மக்கள் தமது குறுகிய மதக் கொள்கைகளின் படிக்குத் தாடி வளர்ப்பதுதான் அவசியம் எனவும், ஒருவிதமான உடையுடுத்தல் அவசியம் என்றும் கொண்டிருந்த மூட நம்பிக்கையை யகற்றிப் பல நாகரீகமான முறைகளைத் தம் குடிகளுக்குப் புகட்டினர்.

இவையன்றி இன்னும் நம் காலத்திற்கே வருவோம், சீன தேசத்தை எடுத்துக்கொண்டால், அங்குள்ள புத்த மதமும் சீர்திருத்தங்களுக்குச் சற்று தடையாகத்தான் இருந்துவந்தது. ஆனால் சன்யாட்சன் என்னும் வீரரும் எனைய பலரும் செய்துவந்த விடாமுயற்சியால் அத்தேசம் அன்னியர்களது ஆதிக்கத்தினின்று விடுவித்துக்கொண்டதுமன்றிச் சமூக விஷயத்தில் பன்மடங்கு முன்னேற்றத்திற்கு வந்துள்ளது. அதே விதமாகத்தான் ஜப்பான் தேசமும் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் இருந்த விடமே தெரியாதிருந்தது. அந்நாடு தனது சக்ரவர்த்திகளும், எனைய மக்களும் "மதம்" என்னும் கயிற்றால் கட்டுண்டு கிடக்காமல் மேனாட்டு நாகரீகத்தையும் சீர்திருத்தங்களையும் உட்புகுத்திய காரணத்தால் இப்போது உலகத்திலுள்ள முற்போக்கான தேசங்களுள் ஒன்றாய்ச் சிறந்து விளங்குகின்றது. தமது "மதம்" என்பது குறுக்கிட்டதர்காக அஞ்சி ஜப்பானியர் வாளாவிருந்திருப்பாரேல், இப்போது அத்தேசம் பிற்பட்டு இருப்பது மன்றி நெடுநாட்கு முன்னரே அன்னியர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்திருக்கவேண்டும் என்பதிலையம் சிறிதும் இல்லை. மற்றும் துருக்கி தேசத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதன் ஆச்சரியகரமானதும் உலகத்துக்கே ஒளிபோன்றதுமான தற்காலச் சரித்திரம் நம் தேசத்து சுயராஜ்ய வாதிகளின் சமய நடு நிலைக் கொள்கைகளுக்கு நேர்மாறாக இருப்பதுமன்றி அன்னருக்கு நாணத்தையும் ஊட்டும் தன்மையதாகும். கெமால் பாஷா என்னும் வீரரின் கீழ்ப்பட்ட அத்தேசம் எந்த முகமதிய மதமானது தன்னை அன்னியர் இடுக்கண்களுக்கும் தன், பெரும் பிற்போக்கிற்கும் அடிமையாக வைத்திருக்கிறதோ, அந்த முகமதிய மதத்தின் கட்டுப்பாட்டினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டது மன்றி, அதுவரையங்கு முழு ஆதிக்கம் செலுத்தி ஒவ்வொரு விஷயத்திலும் தலையிட்டுக்கொண்டு வந்த 'கிலாபத்' என்பதையும் அகற்றிவிட்டது. தீவிரமான சமூக சீர்திருத்தத்தாகத்துடன் கெமால் பாஷா தன் தேச மொழியின் எழுத்துக்கள் அவ்வளவு சிறந்தனவல்ல என்று அவைகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக லத்தீன் எழுத்துக்களை நுழைத்துப் பல புத்தகங்கள் தொகுத்துள்ளார். முகமதிய மதத்தின் சிறந்த கொள்கை எனக்கூறப்பட்டும் வழங்கியும் வரும் 'கோஷா' அல்லது 'பர்தா' என்னும் வழக்கம் இப்பொழுது அங்கு மருந்துக்குக் கூடக்காணக்கிடையாதபடி நீக்கப்பட்டிருப்பதுமன்றி, அந்நாட்டு மாதர்கள் இப்போது ஐரோப்பிய மாதர்களைப்போலவே நடை, யுடை, பாவனை, நாகரீகம் முதலிய எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகின்றனர். அத்தேசத்தில் இப்போது லட்சக்கணக்காக மக்கள் கல்வி கற்க வசதிகளும் வழிகளும் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இவ்வாறே எண்ணமுடியாத பல சீர்திருத்தங்கள் நிரப்பப்பட்ட அத்துருக்கி தேசம் இப்போது ஒரு தேவலோகம் போல் விளங்குகின்றது எனின் அது மிகையாகாது. நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தங்கள் அனைத்தும் முகமதிய 'மதத்திற்கு' ஒருக்காலும் ஒப்பியவையல்ல. முழுதும் மாறுபட்டனவே. அவ்வாறிருப்பினும் அதை சிறிதும் பொருட்படுத்தாமல் கெமால் பாஷா 'மத நடுநிலை' யென்பதை உதரித்தள்ளியதால் தான் அவர் இவ்வளவும் செய்ய இயன்றது. இத்தன்மையதேதான் இப்போதிருக்கும் சோவியத் ருஷ்யாவின் நிலையும். மதக்களைப் பருகி நீண்ட காலம் மயக்கத்திலிருந்த அத்தேச மக்கள் திடீரென எழுந்து 1917-ம் ஆண்டிற்குப்பின் தப்பித்ததால்தான்,

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

"நானும், நான் கண்ட உண்மைகளும்"

[யானை வெடி]

அடேயப்பா! யானை வெடியா!! என்று என் பெயரை வாசித்த மாத்திரத்தில் பயப்பட்டு விடாதீர்கள். சீனர்கள் செய்யும் சீனவெடி நானல்ல. சீனர்கள் செய்யும் யானை வெடி ஒரு வெடி பெரியவெடியாக வெடிக்கும் நான் அப்படியல்ல. அதைப் போலவு மல்ல. ஆறறிவுள்ள மனிதவெடியே. சீனர்கள் வெடியில் நெருப்பை வைத்த வுடன், புகைகிற வெடியும் உண்டு, ஓகோ! ஊமை வெடி. அவ்வளவு தான் என்று அதன் சமீ மத்தில் போய்க் குமிந்து பார்த்தா தாலோ "ஹர்" என்ற சத்தம் தான் கேட்கும். மூஞ்சி, பல், எல்லாம் மட்டமாய் விடும், போய்ப் பார்ப் பது காந்தியாலுலும் சரிதான், மகா லுய், அவதார புருஷனுயிருந்தாலும் சரிதான் அதைச் செய்தவனுகவே இருந்தாலும் சரிதான் அது வேலை யைச் செய்து தான் தீரும். ஆனல் நான் அப்படியல்ல, யார் முகத்தில் வெடிக்கலா மென்பது எனக்குத் தெரியும்.

காஞ்ச புல்லையும், கந்தபுராணத் தையும் வைத்துக் கொண்டு, உலகத் தை மிரட்ட நினைப்பவர்களின் கண் களில் மறு தரம் அவைகளைத்தேடா தபடி, வெடித்து விடுவேன். பண்டி கைகளையும், பகவத் கீதையையும், கொண்டாடுபவர்களின் கைகளில், மறுதரம் எடுக்கா வண்ணம், கொண் டாடாத வண்ணம், சூழ்ச்சி வெளிக் கிளம்பும்படி வெடித்து விடுவேன். நான் ஒரு வெடி யல்லவா? நான் புகைந்து கொண்டே யிருக்கும் போது "கடவுள்" என்பவர் வந்து குமிந்து பார்த்தாலோ! எனக்குக் குதூகலம்! வாடாப்பா! ஊரை, தேச த்தை, இவ்வளவு பாழ் பழுத்திய நீயா!! வா!!! என்று சொல்லிக் கொண்டே வெடித்துத் தலையையே காணுமல் அடித்து விடுவேன். ஒன் றே ஒன்று, அதை ஏன் மறைக்க வேண்டும். அதையும் சொல்லி விடுகிறேன். "குடி அரசு" வாலி பனே, தன்னுடைய கொள்கைக்கு முரணுகப் போவதில் நோக்கம் வைத் தாலோ. அவன் மூஞ்சியிலும்கடைசி யாக வெடித்து விடுவேன். அது அவனுக்கும் தெரியும்.

நான் 6, 7, வருஷங்களாய் "குடி அரசு" என்ற வாலிபனுல் ஒவ்வொரு வாரமும் (சாக்கோட்டையில்) தயார் செய்யப்பட்டு வந்தேன், என்னு டைய 'டிரேட் மார்க்கும்' எஸ். ஆர். தான். பிறகு வாரமும் குடி அரசின் அவதாரங்கள் அடடே! எங்கேயோ வார்த்தை போய் விட்டது. குடி அரசின் காப்பிகள் 50, 60, வரை வருகின்றன. அவைகளில் என்னி டமும், ஒரு 'டேப்ளிகேட்' அவதார மும் வந்து என்னை வெடிக்கும் நிலை மைக்கும் செய்து முடித்தான். அப் பாடி! இப்பொழுது தான் வெடிக் கும் பக்குவம் அடைந்துள்ளேன். என் ரண்டு, மூன்று தடவைவேறு தலைப்புகளில் வெடித்தும்விட்டேன். யானை வெடிக்குப் பெயர் பெரியதா யிருந்தாலும், வெடி ஒன்று தானே! அது போல நானும் ஒரு வெடிதான். வெடிப்பேன் என்று எண்ணி விடா தீர்கள். ஒரு குறிப்பிட்ட காலத் தில், குறைந்த நேரத்தில் செய்யப் பட்ட சீனர் வெடியே ஒரு பெரிய வெடி என்றல் 6, 7, வருஷங்களா கச் செய்யப்பட்ட என்னுள்ளே எவ் வளவு வெடிகளிருக்கும்! எத்தனை வெடி வெடிப்பேன்!! என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஆகவே என்னுடைய வெடிக ளெல்லாம் யாருக் கென்றல் உலகத் திற்கு உணமையை மறைத்துக் கொண்டு, எய்த்துப் பிழைப்பவர்க ளுக்கும், சமூக முன்னேற்றத்திற்கு தடையாயிருப்பவர்களுக்கும், இவர் களுக் கெல்லாம் ஆதாரமாக இருக் கும் ஏடுகளுக்குந்தான் என்பதை உணருங்கள். அவர்களுக்குத் தான் சுடும். வேதனையைக் கொடுக்கும். சீனர்களின் யானை வெடி நம்மீது வெடித்து விட்டால் 'டிஸ்பென்ஸரி' க்கும் போக வேண்டும். 'ஹாஸ்பிட் டலே'த்தேட வேண்டும். ('டிஸ் பென்ஸரி', 'ஹாஸ்பிட்டல்' இவை கள் அன்னியர்பாஷையென்று வெறு க்கிறவர்களுக்கு தமிழ் அர்த்தம் வேண்டுவாலுல் நீங்களே அர்த்தம் செய்து கொள்ளுங்கள். தெரியா மல் போலுல் 'டாக்டரை'க் கேளுங் கள் ஓகோ! இந்த வார்த்தையும் இங் கிலீஷ் வார்த்தையாகப் போய் விட் டதோ!!) என் வெடிக்கு மெடிஸன் களும் தேவையில்லை. பின் என்ன வென்கிறீர்களோ? "பகுத்தறிவை யுய், ஆராய்ச்சி சக்தியையும், மூட நம்பிக்கையையும் அகற்றும்படியாக வுள்ள பத்திரிகைகள் தான், புத்த கங்கள் தான் மருந்து" ஆஹா! இதற்கு ஒரே ஒரு உதாரணம் என க்கு ஞாபகம் வருகிறது. "பாரதம் படித்து பட்டாபிஷேகம் செய்தால் குஷ்ட ரோகம் நீங்கி விடும்" என்று சொல்லி பாரதம், ராமாயணம், படிப்பதை நீங்கள் கேள்விப்பட்ட தில்லையா? அதே கதை தான் என் னுடைய வெடியில் அகப்பட்டு வேத னைப் படுபவர்களுக்கும் நான் வெடிக் கும் விஷயங்களையும், பகுத்தறிவை வளர்க்கும் வாக்கியங்களையும், புத்த கங்களையும் 2 3 தரம் படித்து முடி யுங்கள் ஆனல் பட்டாபிஷேகம் செய்ய வேண்டியதில்லை. புத்தியை நடுநிலைமையிலிருத்திப் படியுங்கள். சுகமடைந்து விடுவீர்கள்.

என் பெயரைக் கண்டதும் உட னே யானை வெடி ஞாபகம் வந்து அதைப் போய் வாங்கி "ட்ரயல்" பார்த்து விடாதீர்கள். அவயவங் களைப் பின்னப்படுத்தி விடும். நல்ல வர் கெட்டவர் என்று கூடப் பார்க் காது. எல்லோருக்கும் ஒரே ராமந் தான் வைத்து விடும். அதை வாங்கவேவேண்டாம். ஏனென்றல் காசும் நஷ்டம். உடம்புக்கும் கஷ் டம். இதற்காகத்தானேயல்லாமல் அது சீனர்கள் வெடியாதலாலும், மேலும் அந்நியர்கள் வெடியாதலா லும், மேலும் பகிஷ்காரிக்க வேண் டியதாலும், மேலும் அந்நியர்கள், சீனர்கள் நம்மை அரிப்படங்க..... ஓகோ! பேஷ் எங்கேயோ போகி றது, பணம்பணமாக, மூட்டை மூட்டையாக சுரண்டுகிறபடியாலும் என்று சிலர் மேல்மேலும் தங்கள் கம்பிகளை இழுப்பார்களே! அந்தப் படியுமல்ல. அந்தக்காரணங்களு மல்ல. அந்நியர் வெடிவேண்டாமென் கிறவர்களிடம் ஒரே வார்த்தை ஒரு சின்னவெடியும் போடவிரும்பு கிறேன். அதாவது 'அந்நியர்வெடி வேண்டாம். காசுசுரண்டும், ஆபத் தைக்கொடுக்கும் அதனல் பகிஷ்கரி யுங்கள்' என்று கத்தினவர்களே! கத்துபவர்களே!! அதே வெடிகள் இந்தியாவில் செய்யப்பட்டால் ஆபத் தைக்கொடுக்காதா? காசு சுரண்டாதா நாங்கள் வெடியே வேண்டாம். அத ற்காக வரும் பண்டிகையும் வேண் டாம் என்று சொல்லும்பொழுது நீங்கள் என்னவென்றல் அந்நியர் வெடி வேண்டாம்' 'தீபாவளிக்கு கதர் வாங்குங்கள்' என்று விளம் பரம் செய்கிறீர்களே இதில்கூடவா உங்களுக்கும் நமக்கும் விரோதம் வேண்டும்? இதில் கூடவா உங்கள் ஓட்டை பெரிதாகவேண்டும்? ஏல ப்பா! அதுபாட்டிற்கு வளர்ந்து விட் டது 'நானும்' என்பதற்கு இவ்வள வானல் 'நான் கண்ட உண்மைகளும்' என்பதற்கு வேறு எழுத்தியாகவேண் டுமே 'குடி அரசு' இடம்தரானே! அவைகள் வேறு இருக்கின்றனவே! என்றுதான் கவலைப்படவேண்டிய தாக இருக்கின்றது. 'நான்கண்ட உண்மைகளில் இரண்டொன்றைக் குறித்துவிட்டு நிறுத்திவிடுகிறேன்.

ஒரு சமயம் ஒரு நகரத்திற்கு ஒரு சிநேகிதரின் கல்யாணத்துக்குச்சென் றிருந்தேன். சொல்ல மறந்து விட்டேன் அது பார்ப்பனரை வைத்து நடத்தும் கல்யாணம் அய் யர் மந்திரம் சொல்லும் 'சீனி'ல் இரு ந்தார். அங்கு ஒரு வண்ணத்தி வந் தாள் அவள் தனக்குச்சேரவேண்டி யது என்று தேங்காய், இலை முதலிய ஏதோ சிலவற்றை எடுத்தாள். வந் தது அய்யருக்குக்கோபம். மந்திர த்தை 'ஜங்ஷன் பிரேக்' போட்டு நிறுத்தினர். தொடுத்தார் வண்ணத் தியுடன் சண்டையை, எல்லோரும் மத்தியஸ்தம் பண்ணவேண்டிய நிலை க்கு வலுத்துவிட்டது. தேங்காய், இலைபோகட்டும் மந்திரத்தைப்பாரு ங்கள்! என்று கத்தினர்கள். அதற் குள் என்பக்கத்திலிருந்தவர்களில் ஒருவர் 'இதற்குத்தான் அய்யர் சமா ச்சாரமே உதவாது என்று 'குடி அரசு' சொல்லுகிறது. அய்யர் இல் லாமலேயே எங்கள் ஊரில் ஒருகல் யாணம் நடந்தது' என்றார். அத ற்கு ஒருவர் (கல்யாணத்தை நடத் தும் கர்த்தா) என்ன சொன்னர் என்றல் 'அய்யரை வைத்து கல்யா ணம் நடத்துவேண்டுமென்பது பெரியவாள் சும்மாவா சொன்னர் கள். பெண்மாப்பிள்ளையிடம் கூச்ச மில்லாமல், சங்கூசமில்லாமல் அவர் களைச்சேர்த்து வைப்பதற்கு வேறு மனுஷால் வரமாட்டார்கள். கையை க்கோர்த்துக்கொள், சுத்திவா, உள் ளேபோ என்றெல்லாம் நாம் சொல்ல முற்படுவோமா? அதற்காகத்தான் அவரை பொதுமனிதனுகவைத்து அவரைக்கொண்டே நடத்துவது' என்றார். (கையைக்கோர்த்துக்கொ ள்ளவும், சுத்திவரவும், உள்ளேபோக வும் பொதுமனிதன்தான் வேண்டும் போலும் அதுவும் கரசுபரித்துக்கொ ண்டு போகும் பொதுமனிதன்தான் வேண்டும்போலும், அது மணம்க்க ளுக்கு அவர்களுக்குத்தெரியாதா?) எனக்கு ரொம்பவும் இவரிடம் சந் தோஷம். எதுவிஷயத்தில்? அய் யர் பிரம்மகுலம் அவர் வாழ்த்தினுல் கேஷமம் எறபடும் அவர் மேக்குலத் தவர் பிரம்மாவின் முகத்திலிருந்து வெடித்தவர்களென்று சொல்லாமல் ஒரு 'டாப்பர் மாமா' என்ற அளவுக் காவது பதில் சொன்னரே அது தான் அவர் விஷயத்தில் அதுவும் அந்த விஷயத்தில் சந்தோஷம் ஏற் பட்டது.

சென்ற தீபாவளி சமயத்தில் மறியல் நடந்தது என்ன மறியல் என்பீர்களோ 'அந்நியத் துணிமறியல், அந்நியவெடிகள் (பட் டாசு) மறியல் தொண்டர்களாலும் தலைவர்களாலும் பிரமாதமாக நடந் தது. நான் சும்மாவிருக்கக்கூடா தா? ஒரு தொண்டரிடம் போனேன் என்னைப்பார்த்தார் நான் உடுத்திரு ந்த ஆடையைப்பார்த்தார்' அந்நியத் துணியை இன்னுமா கட்டுகிறீர்கள் கொளுத்திவிடுங்கள்' என்றர் உங் கள் தலைவர் 'கார்' வைத்திருக்கிறரே அது அந்நியர்களது கார்தானே அதைக்கொளுத்துமபடி சொன்னீர் களா? என்றேன். பாவம்! வெட்கித் துப்போனர். என்னுடன் பக்கதித் லிருந்தவர்களும் சிரித்துவிட்டார் கள். இவர் திடு திடுவென்றுபோய் தொண்டர்களோடு தொண்டராய்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

கோழி முதல் உண்டானதா? அல்லது முட்டை முதல் உண்டானதா?

இரங்கூன் நிருபருக்கு விடை.

[ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

நாம் எழுதிய கடவுளும் பிரபஞ்சமும் (God and the universe) என்னுங் கட்டுரைகளைப் படித்ததன் மூலம் தமக்குண்டான சில சந்தேகங்களை விளக்குமாறு இரங்கூனிலிருந்து ஒரு நிருபர் கீழ்க்கண்ட கடிதத்தை நமக்கு எழுதியுள்ளார். அக்கடிதம்:—

ரெங்கூன், 1—2—32.

ஐயா,

"குடி அரசு" பத்திரிகையில் வெளியிட்டு வந்த தங்களுடைய (God and the universe) கடவுளும் பிரபஞ்சமும் என்னும் கட்டுரையானது என்னை மயங்கச் செய்கிறது. ஆகையால் தங்களுக்கும் கொஞ்சம் கஷ்டத்தைக் கொடுத்து என் சந்தேகம் நிவர்த்தி செய்யலா மென்றும் இக்கடிதம் எழுதலானேன் மன்னிக்கவும்.

1. கோழி முதல் உண்டானதா? அல்லது முட்டை முதல் உண்டானதா?

2. இவைகள் இரண்டில் எவை முதலில் உண்டானவை அல்லது எப்படி உண்டானது. அதை யார் உண்டாக்கினது என்பவைகளே.

தயவு செய்து "குடி அரசு" வாயிலாக தங்கள் அன்பான பதிலை வெளியிட்டால் என் போன்ற சந்தேகமும், மனக்குழப்ப முடையவர்களுக்கும் பேருதவியாக இருக்கு மென்று நம்புகிறேன்.

இந்தக் கடிதத்தில் நமது இரங்கூன் நிருபர் கேட்டுள்ள இரண்டு கேள்விகளை சுருக்கமாக ஒரு கேள்வியாக அதாவது "முதல் உண்டானது கோழியா முட்டையா"? என்று வரைந்து, அதனை விளக்குவாம். இந்தக் கேள்வி புராதனக் கேள்வி. உயிர்கள் உற்பத்தியைப் பற்றி, மெஞ்ஞானம், தனது வெளிச்சத்தை வீசுவதற்கு முந்தி, கேட்டு வரும் கேள்விகளில் இதுவும் வொன்று. சீவப் பொருள்கள் (அதாவது) தாவரங்களும், பிராணிகளும் (Plants and animals,) வந்த விதத்தை அறிவதற்கு முந்தி இவ்விதக் கேள்விகள் கேட்கப்பட்டு வந்தன. உலகம் வந்த விதமென்ன? உயிர்கள் வந்த விதமென்ன? பிரபஞ்சம் வந்த விதமென்ன? மனிதன் வந்த விதமென்ன? இந்தக் கேளவிகளை பல அறிஞர்கள், பல தேசங்களில் கேட்டு வந்தார்கள். மதஸ்தர்கள் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே விடை அளித்து வந்தார்கள். அதாவது, பிரபஞ்சம் ஈறுகவுள்ள உயிர்கள் உள்பட சகல வஸ்துக்களும், "சிருஷ்டி" (Creation) என்றார்கள். ஆனால் சில தத்துவ ஞானிகள் (Philosophers), ஆதிகால முதல் பிரபஞ்சப் பொருள்களையும் "பரிணமத்தால்" (Evolution) வந்தன வென்று யூகித்து வந்தார்கள். இதைத்தான், "சத்தமாம் சோதி தன்னில், சொல்லிய விண்ணும், விண்ணில்....." என்று பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றி, கைவல்ய அதிகாரி எழுதியுள்ளார். ஆனால், இவைகள் யாவும்வெறும் உத்தேசங்களாக இருந்து வந்தன



புதுவை அரசாங்க மந்திரி திருவாளர்

A. V. முத்தையா அவர்கள் B. A, B. L.,

பிரென்ச் சர்க்காரால் ஷெவாலியர் டிலாலீஜியன் டிஹானர்

(Chevalier De La Degion D' Honneur)

என்னும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

சென்ற 100 வருஷங்களுக்கு முந்தி தான், பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றியும், உலக உற்பத்தியைப் பற்றியும், மனித உற்பத்தியைப் பற்றியும் விஞ்ஞானம் விசாரிக்கப் புகுந்தது. அது முதல், தனது ஆராய்ச்சியாலும், பிரத்தியட்ச அனுபவத்தாலும், இந்த கேள்விகளுக்கு இயற்கையாயுள்ள விடைகளை கொடுத்து வர, விஞ்ஞானம் (Science) சக்தி பெற்று வருகிறது.

நமது இரங்கூன் நிருபர் கேள்விக்கு விஞ்ஞானம் என்ன விடை கொடுக்கின்ற தென்று பார்ப்போம். முட்டை முந்தியதா? அல்லது கோழி முந்தியதா? என்றால், கோழி முட்டையும், கோழியும், இவை இரண்டில் ஒன்றும் முந்தியவை அல்ல. நாம் பார்க்கும் கோழியும், அதன் முட்டையும், ஒரு காலத்தில் தோன்றிய வைகள் அல்ல. பல கோடி வருஷங்களாக இவை இரண்டும், வேறு உருவங்களாக இருந்து பரிணமித்து வந்தவை. கோழி, பட்சிவகையை (Birds)ச் சேர்ந்தவை. பட்சிகள், ஓணன், பல்லி முதலிய ஊர்வன (Reptiles) மூலமாகப் பெறப் பட்டவை. ஊர்வனங்கள், தவளைக் கூட்டங்களிலிருந்து (Amphibians) மாறியவை. தவளைகள் மீன் வடிவங்களிலிருந்து (Fishes) உண்டானவை மீன்கள் புழுப்பூச்சிகளாக இருந்து (Worms) மாறியவை. புழுப்பூச்சிகள், சிறு சிறு கிருமிகளால்(Microbes)சையோகம் பெற்று வந்த உயிர்கள் கிருமி இன்னுஞ்சிறுசிறு முட்டைகளால் (Cells) கூட்டப்பட்டவை. இந்த சிறு முட்டைகளால்தான் உலகிலுள்ள உயிர் பெற்ற பொருள்கள் யாவும் கட்டப்பட்டுள்ளன. நாமும், நமக்குக்கீழாகவுள்ள மிருகாதிகள், பட்சி, பரவைகள், தவளை, மீன், புழுப்பூச்சி மூதலியவையாவும், சிறுசிறு முட்டைகளால் (Cells) ஆக்கப் பெற்றுள்ளன. இந்த கோடானகோடி முட்டைகளில் ஒன்று நமது தேகத்தினின்றும், அல்லது கோழி தேகத்தினின்றும் சுக்கில சுரோணிதங்களாக (Sperm and egg) மாறி சையோகத்தில் தொப்பத்தில் கலந்து மனித உருவமாகவும், கோழி முட்டையாகவும் அந்தந்த உயிருக்குத்தக்கபடி வளர்கின்றன. எல்லா உயிர்களும் மேற்கூறிய முட்டை வடிவத்திலிருந்தே கர்ப்பத்தில் தரித்து அந்தந்த உயிர்வகையாக வளர்கின்றன. மனிதன் ஈறுகவுள்ள சகல உயிர்களும் செடி, புல், மரமாக இருந்தாலும்சரி, கிருமி, மீன், கோழி, மிருகம், மனிதனாக இருந்தாலும் சரி, சகல உயிரும் வித்து அல்லது முட்டையிலிருந்தே உண்டாகின்றன. தாவர வித்துக்கும், பிராணி முட்டைக்கும், வித்தியாசமேதுமில்லை. உயிர்கள் யாவும், அதனதன் முட்டையிலிருந்தே உற்பத்தியாகின்றன. உயிர்கள் உண்டாகும் முட்டைக்கு செல் (Cell) என்று பெயர். கோழிமுட்டையில் உயிர் முட்டை நடுவில் கண்ணுக்கு எட்டாத வடிவமாக இருக்கின்றது. மற்ற வெள்ளை அம்பிலியும், மஞ்சள் அம்பிலியும் அந்த சிறு முட்டையிலிருந்து வளரும் குஞ்சுக்கு உணவாக இருந்து வருகிறது. இவ்விதமாகவே எல்லா உயிர்களும் சிறு முட்டையிலிருந்தே பரிணமிக்கின்றன. நாமெல்லோரும் உற்பத்தியாகும் வித்து 120 பங்காக ஒரு அங்குலத்தை வகு

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

ஆண்டு நூறுயினுஞ்சரி, அல்லது காந்தி நூறுயினுஞ்சரி, ஈண்டு சுபராஜ்யம் இல்லை! இல்லை!! இல்லையே!!!

[காங்கிரஸ் துரோகி]

நண்பர்களே! யான் இவ்வாறு புனைப்பெயர் கொண்டு எழுதியதை முன்னிட்டே என் கட்டுரையை வெறுத்துத் தள்ளிவிடாது சற்று விஷயத்தைக் கவனிப்பீர்களேயாயின் ஒவ்வொருவரும் என்னைப் போலவே பெயர் வைத்துக்கொள்வதற்குத் தயங்கமாட்டீர்களென்று உறுதிகூறி இக்கட்டுரையை ஆரம்பிக்கின்றேன்.

அன்பர்களே! பண்டையகால வரலாறுகளையும், இற்றைய நாள் வரலாறுகளையும் சற்று பொது நோக்கோடு கூர்ந்து நோக்குங்கள். நோக்கின் சுயராஜ்யம் வந்தபிறகு எல்லாம் சீர்பட்டுவிடும் என்று மயக்குறை கூறும் காந்தியாரின் கூற்று வெட்ட வெளிச்சமாகும். திரு. காந்தியார் கூற்றுப்படி சுயராஜ்யம் வருவதாக வைத்துக்கொள்வோம்? அப்படிவந்து விட்டால் அது யாரிடம் ஒப்படைக்கப்படும்? ஒன்றுமில்லாதகாலத்திலேயே இந்தியப் பிரதிநிதிகளாகப் பலபேர் சூழ்ந்திருக்கும் ஒரு வட்டமேஜை மகாநாட்டில் தானும் ஒருவராகிய காந்தியார் இந்தியாவின் பிரதிநிதியானும், எனது காங்கிரசுந்தான் என்று அக்கம் பக்கம் கொஞ்சமும் பராது அறிவாளிகளும், ஆராய்ச்சிக்காரர்களும் நிறைந்த ஒரு கூட்டத்திலேயே கூறியிருக்குங் காலத்தில் இப்பொழுது சுராஜ்யம் கிடைப்பதாயிருந்தால் அது வருணச்சிரம காந்தியார் இருக்கும் வயிற்றுப்பிழைப்புக்காரப் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திலிருக்கும், பணக்காரர்கள் இஷ்டத்திற்கு ஒத்திருக்கும், படித்த வொரு தன்னலக்காரர்களால் நிறையப்பெற்றிருக்கும் பாமர மக்கள்—ஏழை மக்கள்—ஒடுக்கப்பட்டவர்கள்—தொளிலாளர்கள் என்ன கேட்டாலும் இது காலமல்ல உங்கட்குத் தனியே கோவில் கட்டிக்கொள்ளுங்கள் நீங்கள் பம்பாயிலுள்ள பணக்காரர்களைப் போல் ஆகவேண்டு மென்று நினைக்காதீர்கள் என்று மக்கள் கண்ணில் மண்ணைத்தூவி மறைக்கும் கூட்டத்தார்கள் நிறைந்த பாழுங் காங்கிரஸ்காரரிடத்தில் தான் ஒப்படைக்கப்படவேண்டும். அக்காலத்தில் தோழர்களே! இந்தியாவில் என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள். அன்றுதான் மத நடுநிலைமை வகிக்கும் காங்கிரஸ் பழய சமணரைக் கழுவிலேற்றிய சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும், வண்ணன் மகன் வண்ணனாகவும், அம்பட்டன் மகன் அம்பட்டனாகவும், தாசி மகள் தாசியாகவுமே இருக்கவேண்டுமென்ற வருணச்சிரம தர்ம சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் மாடுமேய்க்கும்- தயிர் கடையும் உங்கள் பெட்டியில் இரண்டுரூபாய்க்குமேல் இருக்கப்படாது என்ற காந்தியார் சட்டம் அமுலுக்குக்கொண்டுவரப்படும். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்னும் இந்து மதம் காக்கப்படும்

ஏ! காந்திகாங்கிரசைக் கட்டியழும் தோழர்களே! இத்தகைய சுயராஜ்யம் நீங்கள் வேண்டுமென்கிறீர்களா! சற்று நிதானித்துப் பகுத்தறிவுடன் கூர்ந்துநோக்குங்கள் இம்மாதிரியான அக்ரம சுயராஜ்யம்—அராஜக சுயராஜ்யம் நமக்குக் கிடைப்பதைக் காட்டினும் அது கிடையாதொழியினும் நல்லதல்லவா!

இந்த வர்ணச்சிரமக் காங்கிரஸ் கேழ்க்கும் சுயராஜ்யம் நமக்குக் கிடைக்குமேல் இன்று பல மதங்களால் பல்லாயிரம் வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு கண்ணால் பார்த்தாற் பாவம், கையால் தொட்டால் தீட்டு, ரோட்டில் நடந்தால் தோஷம் என்னும் வன்னெஞ்சக்காரர்கள் நிறைந்த இந்தியாவில் ஒற்றுமையென்பது மருந்துக்கேனும் பார்க்கமுடியுமா! ஒருமதத்தான் கிழக்கேதான் போகவேண்டுமென்பான், வேறொரு மதத்தான் மேற்கேதான் செல்லவேண்டுமென்பான், இன்னோருமதத்தான் தெற்கேதான் எகவேண்டுமென்பான், பிரிதொரு மதத்தான் வடக்கேதான் நடக்கவேண்டுமென்பான். இத்தகைய மனப்பான்மையைக்கொண்ட ஒருகூட்டத்தார் ஆதிக்கத்தில் சுயராஜிய இந்தியா உதயமாகுமேல் அஸ்தமனத்துக்குள் அராஜகம் நிறைந்து அந்தியநாட்டு கேவலத்துக்கு இடந்தந்து இஞ்ஞான்று சீனதேசம் நீங்கள் என்ன சொல்லினுங்கேட்கின்றோம், நீங்கள் பார்த்து எங்களுக்கு ஒருவழி காட்டுங்களென்று மானங்கெட்ட வார்த்தைகூறி உலக வல்லரசுகளின் கைபார்த்து நிற்குங்கெதியன்றோ நமக்குங்கிடைக்கும். என் நம்மைப் போன்றுதான் (ஆனால் அவ்வளவு மோசமில்லை) ஆண்டும் ஒற்றுமை கிடையாது ஒற்றுமைகொண்டஜப்பானின் அக்கிரமத்தைக்கூட எண்ணிறந்த ஜனத்தொகையிருந்தும் எதிர்க்கமுடியவில்லை.

இந்த நிலைமையில் நாம் வெள்ளைக்காரர்களிடத்திலிருந்து விடுதலையடைவோமாயின் பெருமாள் மாறிப் பெத்தபெருமாள் வந்தான் என்றபடி இவர்கள் போனால் இன்னும் எத்தனையோ பேர்வழிகள் நம்மை அடக்கி ஆளக்காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பின்னும் பின்னும் கஷ்டத்தையே தேடிக்கொண்டுபோகாமல் நாமும் உண்மை சுயராஜ்யம் பெறவேண்டுமேயானால் அது இந்த வர்ணச்சிரமக்காந்தியால் முடியாது பாழும் பார்ப்பனவாதிக்கக்காங்கிரசால் முடியாது. ஏன்? இது பழய கண்மூடிக்காலமல்ல. நந்தன் கோவிலுக்குள் வரவேண்டுமென்றதற்கு அவனை நெருப்பில் குளிக்கச்செய்த காலமல்ல. நிர்வாணமாகப்பிச்சை போடவேண்டுமென்ற கடவுளர்கட்கு நிர்வாணமாகப்பிச்சை போட்டகால மல்ல. மாடு, பன்றி, கழுதைகளைத் தொடலாம் மனிதனைத்தொடக் கூடாதென்று அமுல் செய்தகால மல்ல. இஃது 'குடி அரசு' உதவியாற்பெற்ற பகுத்தறிவு காலம், எதையும் பகுத்தறிவுகொண்டு அளக்குங் காலம். இம்முறை சுயராஜ்யம் இல்லையேல் என்சமம் கடலில் மிதக்குமென்ற காந்தியாராலுஞ்சரி, கடல் கடந்து போகுங்காலத்தும் களிமண், கங்கா ஜலங்கொண்டு போன மாளவியாவாலுஞ்சரி, கங்கையில் எலும்பைக்கரைத்துத் தந்தையாருக்குப் புண்ணிய மூட்டையைப்பார்சல் செய்த ஜவஹர்லாலாலுஞ்சரி, சமபந்தி போஜனம் செய்யவேண்டுமென்ற தீர்மானத்தைக்கண்டதும் காங்கிரசை விட்டோடிய சோட்டா காந்தி இராஜகோபாலாச்சாரியாலுஞ்சரியார் என்ன கூறினும் நடுநிலைமையில் பகுத்தறிவுகொண்டு அலசிப் பார்க்குங்காலமிஃது. இத்தகைய காலத்துங்கூட பழய காட்டுமிராண்டித்தனத்தை உறுதியாகப்பிடித்துக் கொண்டு சுயராஜ்யம், சுயராஜ்யம் என்றால் பக்கத்திலுள்ள சுயமரியாதைக்காரர்களும், ஏழைமக்களும், தீண்டப்படாதவர்களும் சும்மாவிருப்பார்களா? எங்களுக்கு இத்தகைய கொலைகார ராஜ்யம் (சுயராஜ்யம்) வேண்டாம்! வேண்டாமென்றுதான் மறுதளித்துக்கொண்டேயிருப்பார்கள். அதையே காரணங்காட்டி நம்மை ஆளுங் கூட்டத்தார் எக்காலத்திலும் இற்றைய காங்கிரஸார் வேண்டுஞ் சுயராஜியம் இம்மியேனுந் தரமாட்டார்களென்பது முக்காலும் உண்மை.

இது கண்டுதான் நமது சுயமரியாதைக்காரர்கள் நாம் சுயராஜ்யம் அடைவதற்கும், அடைந்த பின் அதைச் செம்மையுற நடத்துவதற்கும் தக்கமுறைகளைக் கண்டு அதற்கென எவர் தீமையுமேற் கொள்ளாது கருமமே கண்ணாக உழைத்து வருகின்றார்கள்.

இவற்றைக் கண்ட பண்டைய காலந் தொட்டு பாமர மக்களின் இரத்தத்தை அட்டையைப் போல் உறிஞ்சி வாழ்ந்து வந்த பரார்ப்பனக் கூட்டங்களும், ஏழை மக்களின்வியர்வையால் வாழ்ந்து வந்த பணக்காரக் கூட்டங்களும், மக்களை மாக்களாக நடத்தி வந்த வைதீகக் கூட்டங்களும் தங்கள் ஏகபோக வாழ்வுக்கு சாவுமணியடிக்க படுகின்றதே யென்று இடியுண்ட நாகம் போல் குலை நடுங்கிச் செய்வதின்ன தெனத் தோன்றாது வீணே நம்மை நாஸ்திகர்களென்றும், குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்புக ளென்றும், மதத்துரோகிக ளென்றும் உளரிக் கொட்டி வயிற்றுப் பிழைப்புக்காக மானத்தை விலை கூறும் ஒரு சில நமது அண்ணாத்தைகளைக் கொண்டு நம்மை 'சூ' காட்டியும் எந்த விதத்திலேனும் நமக்குள் பிளவேற்படுத்தி நமது சுயமரியாதை இயக்கத்தை ஒழித்துவிட வேண்டுமென்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னவர்களின் கூற்று சூரியனைக் குறைத்த சுணங்கன் கூற்றைத் தான் மெய்ப்பிக்கும்.

எனது சுயமரியாதைத் தோழர்களே! வீணாக இற்றைய தேச நிலைமையைக் கண்டு மனதைத் தளரவிடாதீர்கள். இதற்குமேலானகாலத்தையெல்லாம் நாம் நமது இந்தியாவில் சென்ற பல ஆண்டுகளாய் பார்த்தே வருகின்றோம். யாது பலன். ஒன்றுங் கண்டிலம். வீணே கஷ்டமும், நஷ்டமும் தான் அடைந்தனம். அறிவைத் துணைக் கொள்ளாது பக்தியின் காரணமாகக் காங்கிரசில் ஈடு படுவோமேயானால் நாமே நமது தலையில் மண்ணைப் பொட்டுக்கொள்வதைத் தான் ஒக்கும். காங்கிரசும் உண்மையாக தேசிய விடுதலையென்பது மக்கள் விடுதலையாக மெய்ப்பிக்குமேல் நாமும் நமது இரத்தத்தைச் சிந்தி உதவி செய்யவும் ஆயுள் காலம் வரையில் சிறையிலிருக்கவும் சற்றும் பின்னடையப் போவதில்லை. இது சமயம் காங்கிரசின் கொள்கையை உற்று நோக்கின் பகற் கொள்ளையாகவன்றோ இருக்கின்றது.

தோழர்களே! நன்கு சிந்தனை செய்யுங்கள். உலகத்தை உற்றுநோக்குங்கள். டர்க்கியைப் பாருங்கள். ஜப்பானைப் நோக்குங்கள். ரஷியாவைச் சிந்தியுங்கள் எந்த முறையில் உலக வல்லரசுகளோடு ஒன்றுகக் கலந்து மார்தட்டி நிற்கின்ற தென்பதை ஆலோசியுங்கள். மதத்தை எதிர்த் தொழியுங்கள். ஜாதியைப் போக்குங்கள். கடவுள் செயலென்னும் வெற்றுரையிற்சிக்காதீர்கள். பெண்களுக்குவிடுதலையளியுங்கள் இவற்றின் முடிவு கண்டகாலத்தில். வெள்ளைக் காரர்களை நாம் வேண்டிக் கொண்டாலும் நம்மிந்தியாவில்இருக்கவே மாட்டார்கள். ஆஃதன்றி மேற்குறித்த பகற் கொள்ளைக் காங்கிரஸ் கூட்டத்தை நம்புவீர்களேயாமாயின் ஆண்டு நூறுயினுஞ் சரி, அல்லது காந்தி நூறுயினுஞ்சரி ஈண்டு சுயராஜியம்இல்லை! இல்லை!! இல்லை!!!

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்க ஆரம்பக்கூட்டம்.

திரு. எம். சிக்கையா அவர்கள் தலைவர்.

22—2—32 தேதி மாலை 4-30 மணிக்கு இவ்வூர் "சுயமரியாதை வாலிபர் சங்கத்தின்" ஆரம்பக்கூட்டம் மகாஜன ஹைஸ்கூலைச்சேர்ந்த சரஸ்வதி ஹாலில், முனிசிபல் கௌன்சிலர் உயர் திரு. எம். சிக்கையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது!

அக்கூட்டத்திற்கு இவ்வூர் போர்டு ஹைஸ்கூல் உபாத்தியாயர் திரு. துரைசாமி பிள்ளை, திரு. எஸ். ராமசாமி முதலியவர்களும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும், ஏராளமான மாணவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்டத்திற்கு திரு. எம். சிக்கையா அவர்கள் தலைமை வகிக்கவேண்டுமென்று மாயவரம் திரு. சி. நடராஜன் அவர்கள் பிரேரேபிக்க திரு. நாகலிங்கம் அவர்கள் ஆமோதிக்கபெருங்கரகோஷத்தினிடையே திரு. எம். சிக்கையா அவர்கள் தலைமை வகித்து முகவுரையாக, சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும் வாலிபர்களின் கடமையைப்பற்றியும், வாலிபர்கள் முயற்சியால்தான் மற்ற நாடுகளும் முன்னேறி இருக்கிறதென்றும், ஆகையால் வாலிபர்கள் ஊக்கத்துடன் வேலை செய்ய வேண்டுமென்று பேசி, திருச்சி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்களை ப்பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

பின் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் யாவர் மனதிலும் பதியும் படியாக சுமார் அரை மணி நேரம் அரியசொற்பொழிவாற்றினார். அதன் சுருக்கம் வருமாறு:—

"பண்டைக்கால மன்னர்கள்தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்த நாடெங்கணும் அசுவமேத யாகம் செய்து பின்னர் தம் தலை நகரில் நனியமர்ந்து அரசு செய்ய முற்படுவதைப் போல், இப்பொழுது சுயமரியாதை யெனும் பெரும் இயக்கத்தைஈரோடு வாலிபர்களும், இராமசாமியாரும் முதன் முதல் நாடெங்கணும் பரப்பி அது போதாதென்று ஐரோப்பா முதலிய கண்டங்களிலும் பரப்ப முயன்று, பின்னர் இப்பொழுது தம் தலைநகரில், இயக்கத்தின் தாய் நகரில் தமது வாலிபச் சங்கத்தை நிறுவியது மிகவும் இயல்பே. இவ்வீரோட்டு சுயமரியாதை வாலிப சங்கம் நம் நாட்டிடை ஊர் தோறும், நகர் தோறும் மிளிறும் எண்ணிறந்த சங்கங்களுக்கு ஓயாதஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டுபண்ணும் என நிச்சயமாய்க் கூறுவேன்.

சகோதரர்களே! தற்போது 'சுயராஜ்யம்' என்னும் பேரொலி நாடெங்கணும் ஒலித்துவர, எண்ணிறந்த மக்கள் தம் உடலையும், பொருளையும், உயிரையும் தத்தம் செய்து சுயராஜ்யம் பெற முன் வந்து கொண்டிருக்க, இக்காட்சியைக்கண்டு இளகாத மனமும் ஒருவிதமான உயர்ந்த உணர்ச்சி இல்லாத இந்தியனும் இன்று இல்லையென்றே கூறலாம். இவ்வாறு நாம் கஷ்டப்பட்டு நாளைய தினம் நாம் நாடி நிற்கும் சுயராஜ்யத்தையே பெற்று விடுவோம் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே நாம் ஏனைய நாட்டினரைப்போல் உயர்வும் நாகரீகமும் பெற்று விடுவோமா? சுயராஜ்யம் என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், நாகரீக மேன்மைக்கும் ஒரு வழியேயல்லாது வேறில்லை. அப்படியிருப்பட சுயராஜ்யம் இருந்தாலும் நாம் நாகரீகம் உண்மையில் உள்ளவர்களாவென்றும், அவ்வாறுஆள்வதற்குள்ளசாதனங்கள் நம்மிடம் உண்டா என்றும் நம்மை நாமே கேட்டுக்கொண்டு, அதற்கேற்ற விடையைச் சொல்லிலும், செய்கையிலும் அளிக்கவேண்டிய கடமை நம்மீதுள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது. அத்தகைய அவசியமான கேள்வியைத்தான், இன்று சுயராஜ்யம் வேண்டும் என்பவரும் நாளை கட்டாயம் கேட்டே தீரவேண்டிய கேள்வியைத்தான் நம் சுயமரியாதைக்காரர்கள் இப்பொழுது ஆரவாரத்துடன் கேட்கின்றார்கள். அக்கேள்விக்கு விடையளிக்கும் பொறுப்பு இதுபோன்ற வாலிப சங்கத்தைச்சேர்ந்ததேயாகும்.

முதலாவதாக, நாகரீகம் என்றால் முன்னேற்றம் என்று பொருள்படும். முன்னேற்றமடைவது மனிதருக்கு மிகவும் இயல்பானதன்மை. அறிவிலும், அனுபவத்திலும் கட்டுப்படுத்தப்படாமல் இருக்கும் மனிதர் இயல்பாகவே முன்னேற்றமடைவது சரித்திர அனுபவம். நம் இந்தியர்கள் இவ்வாறின்றி ஆதிநாள் தொட்டு மேலைட்டாரைப் போன்று தீவிரமான முன்னேற்றமடையாதபடிஇருந்து வருவதற்கு இரண்டு பெரிய தடைகள் இருந்து வந்திருக்கின்றன. அவை தாம் பழக்க வழக்கங்களும் தம் வாழ்வில் அதிருப்தியின்மையாகும். நமது அறிவை விசாலப்படுத்தி, பழக்கம் வழக்கம் என்னும் கயிற்றினின்றும் விடுவித்து சுயேச்சையாய் எல்லா வழிகளிலும் உபயோகிக்கவிடாதபடி, நாம் இதுவரை சமூகப் பழக்கங்களாலும் முன்னோர் செய்த முறையே பொன்னார் முறை யெனும் மனப்பான்மையாலும் தடுக்கப்பட்டு வந்த காரணத்தால் தான், நாம் பெரு முயற்சியோடும் விவேகத்தோடும், அறிவு விடுதலையுற்ற மேலைட்டாரைப் போல் புதிய பொருள்களையும், புதிய வாழ்க்கைகளையும் கண்டுபிடிக்க முடியாதபடி பிற்போக்கில் இருந்து வருகிறோம். ஆகவே நாம் பழையனவைகளைக் கழித்துப் புதியன புகுத்துவதற்கு நமது அறிவை வழக்கங்களாகிய கயிற்றினின்றும் விடுவிக்கவேண்டும். மற்றொரு பெருந்தடை நம் வாழ்வில் அதிருப்தியின்மையேயாகும். "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்றும் "இவ்வுலகம் மாயை இவ்வாழ்வின் இன்பங்கள் பொய்" என்றும் நமது இந்து மதம் போதித்து வருவதால் நாம் புதிய புதிய "தேவை"கள் (wants) ஏற்படுத்திக்கொள்ளாமலும் அத்தேவைகளையடைவதற்கு விவேகமும், ஊக்கமும், உழைப்பும் இல்லாமல், நம் தற்கால வாழ்க்கை முறையில் பெருமிதமான திருப்திகரத்தோடு பிற்போக்கிலிருந்து வருகின்றோம். நமது (Pathetic Contenment) "பரிதாபகரமான திருப்தி" ஆங்கிலேயருக்கேயன்றி நமது நாட்டிலுள்ளவைதிகர்களுக்கும் வழக்கங்களுக்கும் நம்மை பெரும் அடிமைகளாக்கி வைத்துள்ளது. இதுமட்டுமென்று, நம்முள் பெருமை (Envy) என்னும் அழுக்கையும் உண்டாக்கி நம்முன் எவரேனும் ஒருவர் நூதன முறையில் வாழ்ந்தாலும் அதைக்கண்டித்தும் அவன் மேலேறவிடாமலும் வருவதால் இந்தியர்கள் வாழ்க்கை முறை முதலியவற்றில் முன்னேறுவதற்கில்லாமல் இருக்கின்றது.

மேற்கூறிய இவ்விரண்டு தடைகளுக்கும் தாய் போன்றிருப்பது நமது இந்து மதம் தான். ஆகையால் John Stuart Mill என்னும் பேராசிரியர் இந்து மதத்தில் முக்கிய குணம் 'பிற்போக்கு என்றுகூறியதில் இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? புறத்துறையாக நூதன நாகரீக வாழ்க்கை முறையை நாம் அனுஷ்டிக்க வொட்டாமல் தடுப்பதேயன்றி இந்து மதம் நம்முள் சமத்துவம் சகோதரத்துவம், அன்பு என்னும் குணங்கள் இல்லாமலும் செய்து வந்துள்ளது. மதம் சாதி என்னும் பேய்கள், பிறப்பிலுல் மீக்கொள் உயர்வு இழிவு உண்டாக்கி, தீண்டாமை என்னும் பேயையும் உண்டாக்கி தினந்தோறும் நம்முள் வெறுப்பு, துவேஷம், வீண் விரோதியாசம் என்னும் கொடும் விஷத்தை ஊட்டிக்கொண்டே வந்து நம்மை நலிவுறுத்தி நாசமாக்கி விட்டது. ஜாதி இந்துக்கள், ஆதிதிராவிடராகிய எட்டுக்கோடி தொகையுள்ள ஒரு கூட்டத்தாரை திருச்சியிலும், ராமநாதபுரத்திலும், சேலத்திலும் செய்து வருவது போல், அவர்கள் கையணி தல் கூடாது, வெள்ளை வேஷ்டிகள் உடுத்தல் தகாதது, அவர்தம் பெண்கள் மார்பில் துணி போடுதல் முடியாது என்று அவர்களைத் தடுத்தும், இம்சித்தும் வருவதால் அவர்கள் நம் இந்து சமூகத்திற்கே கேடு விளைப்பவராயிருக்கின்றதுமல்லாமால் "நாகரீகம்" என்பதே வளரவொட்டாமல், அதற்குப் பெரிய பகைவர்களாய்விளங்குகின்றார்கள். இவர்கள் தானே வரும் சுயராஜ்யத்தில் வன்மையோடிருப்பவர்கள். அப்படியானால் இவர்மாட்டு எட்டுக் கோடி மக்கட்கு என்ன நியாயம் கிடைக்குமென்பதை யோசித்துப்பாருங்கள். இவர்களேதான் மற்றொரு புறம் தீண்டப்படாதார் சுத்தமாக இருப்பதில்லை ஆகையால் அவர்களைத் தொட்டுக் கொள்ளமாட்டோம் என்றும் கூக்குரலிடுகின்றனர். ஆகவே மதங்களும், சாதிப்பேயும் தலை விரித்து நம் நாட்டில் ஆடும்வரையிலும் அவற்றால் விளையும் தீமைகளும் இன்னல்களும் எண்ணிறந்தனவாகும். அவைகள் உள்ளவரையில் குடியரசுத்தத்துவமும் சுயராஜ்யமும் பயன் படவே படா. அவைகளை முதலில் ஒழித்தாலொழிய சுயராஜ்யம் வந்தும் பயனில்லை. திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் கூறுவதைப்போல் "ஜாதி ஒழிவதும், சுயாட்சி வருவதுமே இயல்பு என்பது ஒவ்வொரு இந்திய தேசியவாதியின் கொள்கையாய் இருத்தல் வேண்டும். ஆகையால் சகோதரர்களே, வாலிபர்களாகிய உங்களது கடமை யென்ன வென்றால், சாதி, சமயம், வைதீகம், பழக்க வழக்கங்கள் இவைகளை யொழித்து இவற்றால் இதுவரை நம் இந்தியாவில் தடைப்பட்டு வந்த நாகரீகத்தையும் முன்னேற்றத்தையும் மடைந்திருந்த வெள்ளம் போல் பெருக்க விடுவதேயாகும். இதை ஈரோட்டு சுயமரியாதை வாலிப சங்கம் ஏனைய சங்கங்களின் கூட்டுறவோடும் கட்டாயம் செய்து முடிக்கும் என்பதே எனது விருப்பமும் நம்பிக்கையும் ஆகும்" என்றும், இன்னும் பல அறிய விஷயங்களைப்பற்றி பல மேற்கோள்களுடன் பேசினார்.

பின் திரு. வி. பார்த்தசாரதி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம், அவர்கள் செய்துவரும் வேலைகள், காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் வேலைகள், ஷையாரின் நோக்கம் இவைகளைப்பற்றி உருக்கமாகப் பேசினார்.

பின் திரு. சி. நடராஜன் அவர்கள் வாலிபர்கள் இன்று எவ்வளவு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் இருக்கிறார்களோ, அதுபோல எப்பொழுதுமிருக்க வேண்டுமென்றும், நமதியக்கக்கொள்கைகள் வாலிபர்கள் முயற்சியால் தான் பரவவேண்டுமென்றும் பேசினார்.

பின் தலைவர் முடிவுரையாகச்சொற்பொழிவாளர்கள் பேசிதைத் தழுவிப் பேசினார். திரு. நாகலிங்கம் அவர்கள் வந்தனோபசாரங் கூறிய பின் கூட்டம் கலைந்தது.

குடி அரசு.

ஈரோடு 1932 பிப்ரவரிமீ 28-வ

தனித்தொகுதியா? பொதுத் தொகுதியா?

—:0:—

ஒரு நாட்டில் வகுப்புப் பிரிவினைகள் நிலைத்திருக்கும் வரையிலும், ஒவ்வொரு வகுப்பினரும் தாம்தாம் தனித்தனி வகுப்பினரென்றும், தாம்மற்ற வகுப்பினருடன் உடனிருந்து உண்பதும், கலப்பதும், உறவாடுவதும் தமது மதத்திற்கும், கடவுளுக்கும், வேதத்திற்கும் புராதன நாகரீகத்திற்கும் விரோதமான செய்கையாகுமென்றும் நினைத்துக்கொண்டும். உண்மையாகவே நம்பிக்கொண்டும், இந்த நம்பிக்கையின்படி நடந்துகொண்டும் வருகின்ற வரையிலும் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினருடைய நன்மைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அந்தரங்க சுத்தியுடன் உழைப்பார்கள் என்று நினைப்பது தவறான எண்ணமேயாகும். இவ்விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்கு நாம் வேதங்களையோ, சாஸ்திரங்களையோ, சிலா சாசனங்களையோ கஷ்டப்பட்டு ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியமில்லை. தற்காலத்தில் நம் கண்முன் நடைபெறும் காட்சிகளைக்கொண்டே யாவரும் சுலபமாகத்தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக இன்று அரசியலிலோ, அல்லது உத்தியோகத்துறையிலோ, அல்லது வியாபாரத் துறையிலோ, மற்றும் எந்தத் துறையிலாகட்டும் உயர்ந்த பதவியும், ஆதிக்கமும், செல்வாக்கும் அடைந்திருக்கின்ற அய்யர், அய்யங்கார், முதலியார், பிள்ளை, நாயுடு, செட்டியார், ரெட்டியார், நாடார் முதலிய எல்லா வகுப்பினரும் தங்கள் தங்கள் வகுப்பினருடைய நன்மையையும் முன்னேற்றத்தையும் மாத்திரம் கருதி அவர்களுக்கே உதவி செய்யக்கூடிய நிர்ப்பந்தமான நிலையில் இருப்பதும் தம் வகுப்பினரல்லாத கஷ்டப்படும் மற்ற வகுப்பினர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமிருந்து கூட அவ்வாறு செய்ய முடியாத நிலையிலிருப்பதும் சிறிது உலக அனுபவம் தெரிந்த எல்லோருக்கும் விளங்கக்கூடிய விஷயமேயாகும்.

மற்ற நாட்டுச் சரித்திரங்களை விட்டு விட்டு, நமது இந்திய நாட்டுச் சரித்திரத்தை மாத்திரம் சிறிது யோசித்துப்பார்த்தாலுங்கூட இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. முஸ்லிம் அரசர்கள் நமது நாட்டை ஆண்ட காலத்தில் அவர்கள் முஸல்மான்கள் நலத்தை மாத்திரமே முதன்மையாகக் கருதி அரசாட்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதும், நாயக்க அரசர்கள் ஆண்ட காலத்தில் அவர்கள் தங்கள் குலத்திலுள்ளவர்களையே முதன்மையான பதவிகளில் நியமித்து ஆண்டுவந்திருக்கிறார்கள் என்பதும், வெள்ளைக்காரர்கள் நமது நாட்டை ஆளத் தொடங்கிய நாள் முதல் அவர்களும் தமது வகுப்பினர் நன்மையையே முக்கியமாகக்கருதி ஆண்டுகொண்டிருக்கிறார்கள்என்பதும், முஸ்லிம்கள் ஆண்ட காலத்திலும் நாயக்க அரசர்கள் ஆண்ட காலத்திலும் வெள்ளைக்காரர்கள் ஆளும் இக்காலத்திலும் அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்திருந்தவர்களும், வகித்திருப்பவர்களும் ஆகிய பார்ப்பனர்களெல்லாம் தங்கள் வகுப்பிற்கான நன்மைகளையே சாதித்துக் கொண்டார்கள், சாதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயமும் வெளிப்படையாகத்தெரியக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த விஷயங்களையெல்லாம் நன்முக ஆலோசித்துப்பார்க்கின்ற எந்த வகுப்பினரும், தங்கள் தங்கள் வகுப்பின் முன்னேற்றத்தையும், சுதந்திரத்தையும் கருதுவார்களானால், அவர்கள் தங்களுக்கு அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும் நியாயமான உரிமை கிடைப்பதற்குரிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்பது எந்த வகையிலும் குற்றமற்ற நியாயமேயாகும். உயர்வு தாழ்வான வகுப்புப் பிரிவுகள் நிலைத்திருக்கும் வரையிலும், படிப்பும், பணமும், பதவியும் பெற்ற உயர்ந்த வகுப்பினர்கள் அவை இல்லாத தாழ்ந்த வகுப்பினரை அடக்கி வைத்திருக்கும் வரையிலும், அவ்வாறு அடக்கி வைத்திருப்பதுதான் மதக்கட்டளையும், சாஸ்திர நீதியும் என்ற எண்ணமுடையவர்களாய் இருக்கும் வரையிலும், முன்னேற்றமடைவதற்கு வழி இல்லாமல் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கும் மக்கள், தங்கள் சுதந்தரத்திற்கு அரசாங்க அமைப்பில் பாதுகாப்பு தேடிக்கொடுக்க வேண்டும் என்று கேட்பது தவறானதென்றோ, தேசத்திற்குத் தீமை தரக்கூடிய காரியமென்றோ, நிதான புத்தியுடனிருந்து யோசனை செய்து பார்க்கின்ற கடுகளவு அறிவுடைய எந்த மனிதனாவது சொல்ல முடியுமா?

ஆகவே நமது நாட்டில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டும், மிதிக்கப்பட்டும், நசுக்கப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டும் கிடக்கின்ற மக்கள் தங்களை இதுவரையிலும் முன்னேற விடாமல் தடைப்படுத்தி வைத்திருந்த கூட்டத்தாரின் கையில் அரசியல் அதிகாரம் திடைக்கப்போகின்ற காலத்தில், அவர்கள் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அரசியல் சுதந்திரத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்க முன்வந்திருக்கிறார்கள். இவ்வாறு தாழ்த்தப்பட்டவர்கள் கேட்பதை இதுவரையிலும் ஏகபோகமாக உரிமையாகச் சுகம் அனுபவித்து வந்த கூட்டத்தார் "இப்படிக் கேட்பது துவேஷமான காரிய" மென்றும், "தேச ஒற்றுமைக்கு விரோதமானக் காரிய" மென்றும் கூறித் தடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற விஷயம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், அவர்களிடத்தில் அனுதாப முள்ளவர்களுக்கும் தெரியாததொன்றல்ல. இதன் உண்மையை வட்ட மேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளும், முஸ்லீம் வகுப்புப் பிரதிநிதிகளும், கிருஸ்தவர், ஐரோப்பியர், சட்டைக்காரர் முதலான சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகளும் எதிர்கால அரசியல் சீர்திருத்தத் திட்டத்தில் தங்களுக்குத் தனிப்பட்டத் தேர்தல் தொகுதி இருக்க வேண்டு மென்று கூறியதையும், இதைக் காங்கிரஸ் பிரதிநிதியாகவும், வருணாச்சிரம தருமத்தின் பிரதிநிதியாகவும் இந்து மகாசபையின் பிரதிநிதியாகவும் வட்ட மேஜை மகாநாட்டிற்குப் போயிருந்த திருவாளர்களான. காந்தி, மாளவியா, மூஞ்சே, முதலானவர்கள் ஆதி முதல் அந்தம் வரையிலும் எதிரிகளாக இருந்து மறுத்துப் பேசிய தலிருந்தும் அறியலாம். கடைசியாக இந்த வகுப்பு சம்பந்தமான தகராறு ஒரு முடிவுக்கு வராத காரணத்தினாலேயேவட்டமேஜை மகாநாடும் பயன்தரத் தகுந்த ஒரு முடிவுக்கும் வராமல் வீணாக் கலைந்தது. அப்போது முதல் மந்திரியாகிய திரு. மெக்டொனால்டு அவர்களும் "வகுப்புப்பிரச்சினை சம்பந்தமாக நீங்களே ஒரு சமசரமான முடிவுக்கு வருவீர்களானால் அதன் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளு" மென்றும் "இல்லாவிட்டால் இனி ஏற்படுத்தப்படும் வட்டமேஜை மகாநாட்டுக் கமிட்டிகளின் மூலம் அரசாங்கமே முடிவு செய்யு" மென்றும் கூறி அனுப்பி விட்டார். அவ்வாறே இப்பொழுது அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமிக்கப் பட்ட தனித்தனி மூன்று கமிட்டிகள் இந்தியாவில் துரிதமாகத் தமது வேலைகளைச் செய்து கொண்டு வருகின்றன. இவற்றுள் திரு. லோதியன் அவர்களைத் தலைமையாகக் கொண்ட வாக்குரிமைக் கமிட்டியானது பல விடங்களிலும்சுற்றுப்பிரயாணம் செய்து எவ்வாறு வாக்குரிமையளிப்பது என்பதுபற்றியும், எந்த முறையில் தேர்தல் தொகுதிகளை ஏற்படுத்துவது என்பதைப் பற்றியும் விசாரணை செய்து கொண்டு வருகிறது. இக்கமிட்டி கடைசியில் எந்த விதமாக முடிவு செய்கிறதோ அந்த முடிவே அநேகமாக ஆங்கிலப் பாராளுமன்ற சபையாரால் ஒப்புக் கொள்ளப் பட்டு அரசியல் சீர்திருத்தமாக வரக்கூடுமென்று நம்பலாம். ஆகவே இச்சமயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும், மற்ற சிறுபான்மை வகுப்பினரும் தங்களுக்குவேண்டிய பாதுகாப்பைத்தேடிக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆகையால் அவர்களுக்கு அதிகாரம் வாய்ந்த சட்டசபை முதலிய ஸ்தாபனங்களில் பங்கு பெற எந்தவிதமான தேர்தல் தொகுதி இருந்தால், அவர்களின் உண்மையான பிரதிநிதிகள் யாருடைய செல்வாக்கிற்கும், எதிர்ப்புக்கும், தயவுக்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் தேர்ந்தெடுக்கப்பட்டு, அச்சமூகத்தின் உயர்வுக்காகவும், விடுதலைக்காகவும் உழைக்கமுடியும் என்னும் விஷயத்தில் நமது அபிப்பிராயம் என்னவென்பதை இப்பொழுது முடிவாகத்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

முஸ்லீம் வகுப்பினரின் உண்மையான பிரதிநிதிகளாகிய மௌலானா ஷௌகத்அலி போன்றவர்கள் முஸ்லீம்களுக்குத் தனித்தேர்தல் தொகுதியே இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களென்பதும், இந்தியக்கிறிஸ்துவர்களும், சீக்கியர்களும், ஐரோப்பியர், சட்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டைக்காரர் முதலியவர்களும் தனித்தேர்தல் தொகுதியையே விரும்புகிறார்களென்பதும், எல்லோரும் அறிந்த செய்கையாகும். இதைப்போலவே தாழ்த்தப்பட்டவர்களும் தனித்தேர்தல் தொகுதியையே விரும்புகின்றார்களென்பதை அச்சமூகத்தார் இந்தியா வெங்கும் பலவிடங்களிலும் கூடிய பலமகாநாடுகளிலும் மற்றும் அவர்களுடைய ஸ்தாபனக்களாக இருக்கின்ற பலசங்கங்களிலும் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களின்மூலமாகவும், இச்சமூகத்தாரின் செல்வாக்கு வாய்ந்த தலைவர்களான திருவாளர்கள் அம்பேட்கார், சீனிவாசன், எம். சி. ராஜா, சிவராஜ், முனிசாமிபிள்ளை, சுவாமி-சகஜானந்தம், முதலியவர்களின் அபிப்பிராயங்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் சமீபத்தில் திரு. எம். சி. ராஜா அவர்கள் இதற்குமுன் வெளியிட்டதனது அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு இப்பொழுது பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவது மூலமாகத்தேர்ந்தெடுக்கப்படுவதிலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்குவிமோசனமுண்டு என்று கூறமுன்வந்திருப்பதுபற்றி நாம் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை. திரு. ராஜா அவர்கள் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டதைப்பற்றி அவர்கள் கூறும் காரணங்களைசிறிது ஆராய்ந்துபார்ப்போம்.

1. தனித்தொகுதி ஏற்படுத்தினால் தேர்தலுக்கு முன்வரும் அபேட்சகர்கள் ஓட்டர்களைச் சந்திக்க இரண்டு மூன்று ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டுமாகையால் ஏழை மக்களாய் இருக்கின்ற அச்சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு இது மிகவும் கஷ்டமாக இருக்கும்; ஆகையால் பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதே நன்மையாகும்.

2. தாழ்த்தப்பட்ட சமூகத்தார் இப்பொழுது மத பக்தியிலும், தெய்வ வணக்கத்திலும் வர வர அதிகப்பட்டு ஜாதி இந்துக்களின் ஆதரவு பெற்று வருவதாலும், ஜாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்ய முன்வந்து கொண்டிருப்பதாலும் பொதுத்தொகுதிலேயே அவர்களின் சரியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப்படக்கூடும்.

3. வரப்போகும் மாகாண சுயாட்சியில் அரசியல் கட்சிகளே அதிகாரம் வகிக்குமாகையால் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியை ஆதரித்து நின்றால் தான் மந்திரி பதவி பெற முடியும்; ஆகையால் தனித் தேர்தல் தொகுதி ஏற்படுத்திக்கொண்டு ஒதுங்கி நிற்பதைவிட பொதுத்தேர்தல் தொகுதியில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் அரசியல்கட்சிக்காரர்களின் ஆதரவு பெற்று அச்சமூகத்தாரின் சரியான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முடியும்.

என்ற காரணங்களை திரு. ராஜா அவர்கள் கூறுகின்றார். இக்காரணங்கள் எவ்வாறு பொருத்த மற்றவையாக இருக்கின்றன என்பதைச் சிறிது காட்டுகின்றோம்.

தனித்தொகுதி ஏற்படுத்தினால் அபேட்சகர்கள் அதிக தூரம் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டுமென்று பயப்பட வேண்டியஅவசியமே இல்லை. தாழ்த்தப் பட்ட சமூகத்தாருக்கு அவர்களுடைய உண்மையான நன்மையைக் கவனிக்கின்ற தலைவர்கள் யார் என்பது தெரியும். ஆகையால் அவர்களுக்கு ஓட்டுச் செய்ய முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. உதாரணமாகச் சென்ற வட்ட மேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்டசமூகத்தாருக்காக உண்மையோடு போராடிய திரு. அம்பேட்கார், திரு. சீனிவாசன் ஆகியவர்களின் அபிப்பிராயங்களை ஆதரித்துக் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள தாழ்த்தப் பட்டவர்கள் தீர்மானங்கள் செய்யவில்லையா? இன்று அந்தப் பிரதிநிதிகள் இந்தியாவுக்கே ஒரு அபேட்சகராக முன் வந்தால் அவர்கள் இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து தாழ்த்தப்பட்ட சமூக ஓட்டர்களை எல்லாம் சந்தித்தால் தானே அவர்களுக்கு ஓட்டுக்கிடைக்கும்? அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யாமலே தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லையல்லவா? அதுபோலவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையாகப் பாடு படுகின்ற தலைவர்கள் கஷ்டமில்லாமலே தேர்ந் தெடுக்கப்பட முடியும் என்பதில் கொஞ்சமும் சந்தேக மில்லை.

அடுத்தபடியாகத் "தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் இந்துமதத்தைச்சேர்ந்தவர்களாகயிருந்துவருவதாலும், ஜாதி இந்துக்களும் அவர்களுக்கு உதவி செய்ய முன்வருவதாலும் அவர்களுக்குத் தனித் தேர்தல் தொகுதி வேண்டாம், பொதுத்தேர்தல் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதே போதுமானது" என்பதைப்போன்ற மோசமான அபிப்பிராயம் வேறொன்றும் இல்லையென்றே நாம் சொல்லுவோம். இன்று அன்னிய மதங்களை அனுசரித்து வருகின்றதாழ்த்தப்பட்டவர்களைக்காட்டிலும் இந்து மதத்திலேயே இருந்து வருகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தான் அதிகமான கஷ்டங்களும், நிர்ப்பந்தங்களும் இருந்து வருகின்றன வென்பதும், இவைகளுக்கு இந்து மதமே காரணமாக இருக்கின்றதென்பதும், ஆகையால் இந்து மதம் அழிந்தாலே அல்லது இந்து மதத்தை விட்டு வெளியேறினாலோ ஒழிய தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு விமோசனமில்லை என்பதும் பகுத்தறிவுடையவர்களுக்குத் தெரியாத செய்தி அல்ல. வர்ணாச்சிரமதருமத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து மதத்தை நம்பியிருக்கும் உயர்ந்த சாதிக்காரர்களாலும், மதங்களையும், கடவுள்களையும், வருணாச்சிரம தருமங்களையும் காப்பாற்றவேண்டுமென்ற அரசியல் வாதிகளாலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தார் சமத்துவம் பெற முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள்! அன்றியும் இன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தார் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிப்பதற்கும், கோவிலுக்குள் செல்வதற்கும், பொதுக்குளம், கிணறுகளில் தண்ணீர் எடுப்பதற்கும், பொதுத் தெருக்களில் நடப்பதற்கும் தடையாக இருக்கின்ற உயர்ந்தசாதி இந்துக்கள் எப்படி அவர்களின் சமத்துவத்திற்கு உழைக்கும் உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்களா? என்று தான் கேட்கின்றோம்.

அடுத்தபடியாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்எதேனுமொரு அரசியல் கட்சியை ஆதரித்தால் தான் மந்திரிப்பதவி பெற முடியுமென்பதற்கும், தனித்தேர்தல் தொகுதிக்கும், என்ன சம்பந்தமிருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்று பொதுத் தொகுதியில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு அபேட்சகராக வருகின்றவர்கள் ஏன் அவ்வாறே தனித் தேர்தல் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்று கேட்கின்றோம். இன்று தனித் தேர்தல் தொகுதியிலிருக்கும் முஸ்லீம்களின் பிரதிநிதிகளும், கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளின் பேரால் அபேட்சகராக நிற்பதும், தேர்ந்தெடுக்கப்படுவதும் தெரியாத விஷயமா? ஆகையால் மந்திரி பதவி பெற்றுவதற்கு பொதுத் தேர்தல் தொகுதி அனுகூலமாய் இருக்குமென்று சொல்லுவதும், தனித்தேர்தல் தொகுதி பிரதிகூலமாயிருக்குமென்று சொல்லுவதும் தவறான அபிப்பிராயம் என்பதில் சந்தேகமில்லை.

இனி பொதுத்தொகுதி, பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதில், தனித் தொகுதி இம்மூன்றிலுமுள்ள நன்மை தீமைகளை மாத்திரம் எடுத்துக்காட்டி முடிக்கவேண்டும்.

தற்சமயத்தில் காங்கிரஸ்காரர்களும், இந்து மகாசபைக்காரர்களும் சொல்லுவது போல "பொதுத் தேர்தல் தொகுதியிலேயே தாழ்த்தப்பட்ட சமூகத்தார் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்". என்று முடிவு செய்து விட்டால் அச்சமூகத்தாரின் பிரதிநிதிகள் ஒருவரேனும் சட்டசபையில் ஸ்தானம் பெற முடியாதென்பது நிச்சயம். வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கப்பட்டாலுங்கூட உயர்ந்த ஜாதி இந்துக்களே மெஜாரிட்டி ஓட்டர்களாக இருப்பார்களென்பதும் அவர்கள் தாங்கள் இதுவரையிலும் அனுப்பி வந்த ஆதிக்கத்திலும், அதிகாரத்திலும் சமத்துவம் பெற விரும்புகின்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் பிரதிநிதிகளுக்கு ஓட்டளிக்க முன்வரமாட்டார்கள் என்பதிலும் சிறிதும் ஐயமில்லை.

அடுத்தபடியாகப் பொதுத் தேர்தல் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டாலும் மெஜாரிட்டி ஓட்டர்களாகிய உயர்ந்த ஜாதிக்காரர்களின் ஆதரவைப்பெற்றவர்களும், தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் சுதந்தரங்களை விட்டுக்கொடுத்து உயர்ந்த சமூகத்தாரின் ஆதிக்கத்திற்கு சாதகமாய் இருக்கின்ற அடிமை மனப்பான்மை உடையவர்களும்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்று சொல்லுகிறோம்.

ஆகையால் தனித் தேர்தல் தொகுதி ஏற்படுவதின் மூலமாகவும், அச்சமூகத்தாரே தங்கள்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகவும் தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்களும், மற்ற சிறுபான்மை வகுப்பினரும் தங்கள் சமூகத்திற்குழைக்கும் உண்மையான பிரதிநிதிகளைச் சட்ட சபைகளுக்கு அனுப்பி நன்மை பெற முடியுமென்று துணிவாய்ச் சொல்லுகிறோம். ஆகையால்தாழ்த்தப்பட்ட சமூகத்தார்கள் இச்சம

தமிழர் முன்னேற்றம்.

பினாங்கில் நடந்த அகில மலேயா தமிழர் இரண்டாவது மகாநாட்டில் சிங்கப்பூர் முன்னேற்றம் பத்திராதிபர் கோ. சாரங்கபாணி அவர்கள் செய்தபிரசங்கத்தின் பகுதி.

தொழிற்கல்வியின்மையால், கைத்தொழில் குறைவால், தொழிலில், வியாபாரத்தில், பிற்போக்குற்றோம். எனினும் சமூகத்துறையிலாதல் மேன்மைபெற்றோமில்லை. 'பெண்ணை வெறுத்தல் பேரின்பம்' என்னும் பாழுங் கொள்கை இடைகாலத்துத்தோன்றி பல வாற்றானும் துன்புரியும் பெண்மையின் பெருமையை மாய்த்தது. பெண்மையைக்காமப் பொருளாக்கியது. அவளுடன் அனுபவிக்கும் இன்பமும் சிற்றின்பமாகியது. அன்று தொட்டு உலகம் பெண்மையின் உரிமைகளனைத்தையும் குலைத்தது. பெண்மகள் கல்வி பயிலகூடாதெனத்தடுக்கப்பட்டாள் பெண்மகள் தனிக்கினிய ஒருவனை தனக்குரிய தலைவனுய்த்தானே தெரிந்தெடுக்கும் உரிமையை இழந்தாள். இனிய மனைனற்ற இல்வாழ்க்கையில் இன்னல்கள் பெருகின. துயரங்கள் மல்கின. ஒத்த நலனும், ஒத்தபண்பும், ஒத்த அன்பும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடைய ஒருவனும், ஒருத்தியும் கூடிவாழும் வாழும் வாழ்வைவிட உயரிய வாழ்வு ஏதேனும் உலகிடை உண்டோ? இதை உணராதாரே பெண் உலகிற்குப்பெரும் பழி சுமத்தினர். பாட்டுகள் பல பாடிப்பரப்பினர். அவர்களை எல்லாம் யோகிகளாம். பெண்மையைப் பாராட்டுவோரெல்லாம் போகிகளாம். மாசுபடர்ந்த மனத்தினரே பெண்ணைக்காமப்பொருளாய்க்கருதினர். மாசற்ற மனத்தினர்க்கு பெண் காமப்பொருளன்று. வாழ்க்கைக்குரிய கொழு கொம்பே பெண்மை எனக்கொள்வர். காதல், காதல், காதல் இன்றேல் சாதல், சாதல், சாதல் என்ற புண்ணியன் வாக்கு பொய்யோ?

பண்டு பெண்கள் உரிமையுடன் உயர்வாழ்வு வாழ்ந்திருந்தனர். ஆரியர் இந்தியா நுழைந்த பின்னரே பெண்களுக்கு கல்வி தடுக்கப்பட்டது. தொழிலாளரும் மற்றையோரும் கல்வி கற்கலாகாதென மறிக்கப்பட்டது. கல்வி ஒரு கூட்டத்திற் கேஉரியதென்றும், அதை பயிலுவதே அவர்களின் வேலை என்றும் காரணப்பட்ட கெடும் நியதி நாட்டிடை நிலை நாட்டப்பெற்றது. கல்வி தடை செய்யப்பட்டதென்பது அறியாமைப் படுகுழியில் வீழ்த்தினர் என்பதன்றி வேறென்ன். அன்றிருந்தே பெண்மகள் ஆணின் காமப்பொருளாய் கருதப்பட்டாள், அவளுடன் கூடிவாழும் வாழ்வும் சிற்றின்பமென ஒதுக்கப்பட்டது. மறுமை என்றும் பேரின்பம் மென்றும் பல பொய்மைகள் புகுத்தப்பட்டன. இயற்கை அழகு ஒருங்கே திரண்டெழுந்த அழகுடைய பெண்ணையா, அன்பையா, மனித வாழ்விற்குரிய கொழுக்கொம்மையா, மாயப் பிசாசு, பேய் என்று ஒதுக்குதல் ஆ! இதனினும் கொடுமை நாட்டில் உண்டோ? இவைபோன்று பெண்மைக்கு இழைத்த கேடுகள் எண்ணில! எண்ணில. அவ்விழிவுகளையும், இழிவுகளையும் ஈண்டு விரித்தல்மிகையாகும். அவை அனைத்தும் உங்கட்குப்பழம் பாடம். பெண் நலன் பேணுங்கள் பெண் கல்வி நல்குங்கள், தனிக்கினிய ஒருவனைத்தானே தெரிந்தெடுத்துக்கொள்ளும் உரிமையை வழங்குங்கள், நலன்களையும் அவளும் அனுபவிக்க உடன்படுங்கள். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழச் செய்யுங்கள்.

பெண்கள் பேதையர் என்னும் குருட்டு வார்த்தைகளை அன்றே ஜோன் ஆப் ஆர்க்கும், ஜான்ஸி ராணியும் தகர்த்தெரிந்தனர். இன்று பாராளும் மன்றத்தில் பதின்நான்கு பெண்களைக்கண்டோம். ஆகாய ராணி அமிஜான்சனைக்கண்டோம். வட்டமேஜையில் நவாஸ் ஷாபீகத்தை, ராதாபாயைக்கண்டோம், சட்டசபையில் முத்துலட்சுமியைக்கண்டோம், தேசியபோராட்டத்தில்சரோஜினி உள்ளிட்டாரைக்கண்டோம். பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் வந்துவிட்டோம் என்கிறார்கள். பத்து கோடிக்கு அதிகமான ஜனத்தொகை கொண்ட சோவியத்து அரசாங்கத்தின் பொக்கிஷ மந்திரியாய் வீற்றிருக்கும் மேடம் பார்பாரா யாக்கவ்லீவா (Madame Barbara Yakovleva) என்னும் மாதரசை நீங்கள் கண்டதில்லையா? கேட்டதுமில்லையா? இப்பரந்த உலகில் பெரிய அரசாங்கத்திற் பொக்கிஷ மந்திரியாய் வந்த முதல் பெண் அவரன்றோ அத்தகைய ஒருபெரும்பேற்றை இதுவரை வேறு எந்த அரசாங்கமும் பெண்கட்கு நல்கவில்லை. பொக்கிஷ நிர்வாகம் புரண்டு, வல்லரசுகள் எல்லாம் விழிக்கும் இன்று சோவியத் அரசாங்கத்தின் பொக்கிஷத்தைப்பற்றி பத்திரிகைகள் ஏதேனும் கூறினதுண்டா? பேதமை என்பது மாதர்க்கணிகலம் என்று சொல்லுதல் எவ்வளவு பேதமை என்பதை இன்னும் அதிகமாய் விளக்குக உதாரணங்கள் வேண்டுவதில்லை. பெண்மைக்குரிய நலன்களை தகைப்பதே பெண்மையின் உரிமைகளைப்பறிப்பதே பேதமையாகும்.

பெண்மையின் நலன்கள், உரிமைகள் யாவை என்பதை ஈண்டு விரித்துரைக்க விரும்புகிறேனில்லை. அவைகளைக்கேட்டுக்கேட்டு காதும் புளித்துவிட்டது. பேசிப்பேசி நாவும் தடித்துவிட்டது. எழுதி எழுதி கையும் அலுத்துவிட்டது. நமக்கு எழுத்துவேண்டாம், பேச்சு வேண்டாம் வேண்டப்படுவது செயல் ஒன்றே.

மறுமை மயக்கம்.

பெண்ணை வெறுத்தோர்க்கு பேரின்பம் உண்டென்ற பேதமை குடிகொண்ட நாள்தொட்டு உலகம்பொய் என்னும் ஓர் வழக்கு நாட்டில் வழங்கி வருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாது சொல்லிக்கொண்டிருக்கட்டும் உலகம் மாயை எனக்கருதுவோர்க்கு பெண்ணின்பெருமையும், காதலின்பமும் புலப்படா. வீடுகட்டி குடித்தனம் பண்ணுவோர்க்கு அச்சாஸ்திரம் பயன்படாது. நமக்குத்தந்தை வைத்துவிட்டுப் போனவீடும்வயலும் பொய்யா? தங்கச்சிலைபோலே நிற்கிறாள் மனைவி, நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர்விட்டுக்கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள், அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானு? பெற்றவர்களிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக்கும்பிடும் 'சூல தெய்வம்' பொய்யா?

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே நீங்களெல்லாம் சொற்பனந்தானு? பல தோற்ற மயக்கங்களோ? கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே நீங்களெல்லாம் அற்ப மாயைகளோ உம்முள் ஆழ்ந்தபொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மாசறுசெறிவே நீங்கள் எல்லாம் கானலினீரோ, வெறுங்காட்சிப்பிழைதானே

போனதெல்லாம் கனவினைப்போற்புதைந்தழிந்தே போனதானு, நானுமோ கனவோ இந்த ஞாலமும் பொய்தானே.

காலமென்ற ஒரு நினைவுங் காணுமென்றே பல நினைவும் கோலமும் பொய்களோ, அங்கு குணங்களும் பொய்களோ.

சோலையிலே மாங்கனிகளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றுல் சோபொய்யாமோ, இதைச்சொல்லொடு சேர்ப்பாரோ,

வீண்படு பொய்யிலே நித்தம் காண்பதுவே யுறுதி கண்டாய் காண்பதல்லா லுறுதியில்லை காண்பது சக்தியாம் இந்தக் காணுமி நித்திய மாம்.

என பாரதியார் கூறிய இம்மொழிகள் உலகம் பொய் என்னும் பெரும் பொய்யை விளக்குகின்றன. நாட்குட் நல்வாழ்வு வாழ விரும்பாதமனிதர் யாரேனும் உண்டோ! நீண்ட வயது; நோயில்லாமை, திரண்ட செல்வம், பேரறிவு இவைகளை கோருத மனிதரும் உண்டோ?

தேடிச் சோறு நிதந்தின்று பல சின்னஞ்சிறு கதைகள்பேசி—மனம் வாடித் துன்பமிக வுழன்று- பிறர் வாடப் பல செயல்கள் செய்து-நரை கூடிக் கிழப்பருவ மெய்தி-கொடுங் கூற்றுக் கிரையெனப் பின் மாயும் பல வேடிக்கை மனிதரை.

ஈண்டு நான் குறிப்பிடுகின்றேனில்லை.

தீண்டாமை.

பெண் அடிமையைப் போல் நம் சமூகத்தைப் பாழ்படுத்தும் மற்றோர் பேய்மை தீண்டாமையாகும். தீண்டாமை என்று, எதற்காக, எப்படி, யாரால் உண்டானது. அது வேதத்திலுண்டா. மதத்திலுண்டா என்ற ஆராய்ச்சியில் நாம் தலைப்பட வேண்டாம். இப்பாழுந் தீண்டாமை நம் நாட்டிற்குப் பெரும் பழியை உண்டாக்கி நிற்கிறது. மக்கள் வாழ்வைக் குலைக்கின்றது. மனிதஉடல் தாங்கித் திரியும் மனதை கொடுமைக்கு ஆளாக்குகின்றது. ஆதலால் இப்பாழுந் தீண்டாமையை ஒழித்தல் வேண்டுமென நாட்டவரனைவரும் நவில்கின்றனர். ஆங்காங்கு சிற்சில முயற்சிகள் தோன்றி மறைகின்றன. தீண்டாமை ஒழிக்க பார்ப்பாரும் பரிந்து பேசுகின்றனர் நாசிக், ராம குண்ட குளத்திற்கும், கோயிலுக்கும் இன்று முள்வேலி போட்டடைத்திருப்பது எதனால்? தீண்டாமைக் கொடுமையன்றோ! பல்லாண்டுகளாய் ஒதுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு, கொடுமைகள் இழைக்கப்பட்டு, பயமுறுத்தப்பட்டு, அடிமைப் படுத்தப் பட்டிருக்கும் கொடுமை மேடை மீதிதமர்ந்து பேசுவதா

யத்தில் ராஜீய வாதிகளின் வார்த்தைகளையும், சமத்துவத்திற்குப் பாடுபடுவது போல் நடிக்கும் வைரம் பாய்ந்த வருணச்சிரம தரும இந்துக்களின் வார்த்தைகளையும், அரசியல் வாதிகளாலும், வருணச்சிரமதரும இந்துக்களாலும் எமாற்றப்பட்டிருக்கும் சிலருடைய வார்த்தைகளையும் கேட்டு மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்கின்றோம். உண்மையிலேயே தங்கள் சமூகத்திற்கு நன்மை செய்வதாக இருக்கின்ற தனித்தேர்தல் தொகுதி வேண்டுமென்றே கிளர்ச்சி செய்வார்களென்றும் இவ்விஷயத்தையே திரு. லோயன் கமிட்டியின் முன் சாட்சியங்கூறும்போது எடுத்துச்சொல்லி தங்கள் நன்மையில் வெற்றி பெறுவார்களென்றும் எதிர்பார்க்கிறோம்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவி.

ரூ. 10000 நன் கொடை.

திருச்சி ஜில்லா லால்குடி, ஜில்லா போர்டு ஸ்கூலில் வாசித்து வரும் ஆதிதிராவிட மாணவர்களின் நலனுக்கும் உபயோகத்துக்கும் ராவ்பகதூர். சபாரத்னம் செட்டியார் அவர்கள் ரூ. 10000 நன்கொடை யளித்துள்ளார். கெஜ தொகையானது கெஜ ஸ்கூலில் வாசிக்கும் ஆதிதிராவிட மாணவர்களின் சாப்பாட்டு வசதிக்காகச் செலவிடப் படும்.

லா போய் விடும். பளிங்கு கட்டிலில் பஞ்சணை மெத்தையில் படுத்து புரளுவோரோ, வைக்கோல் தரையில் கட்டாந்தரையில் கிடந்து புரளுவோர் நிலையுணர்வர். பால் பழம் பாயாசத்தோடு மணி தவறுது உண்டு ஜீர்ணிக்க மருந்துண்போரா கால் வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறப்போர் நிலை அறிவர். இவர்களோ தீண்டாமை ஒழிக்க வல்லவர். உண்மையில் தீண்டாமை ஒழிய வேண்டுமானால் அதனால் கொடுமை செய்யப் பட்டுள்ளோர் தங்கள் மனதில் குடி கொண்டிருக்கும் பயத்தை ஒழித்து, மனிதராய், மனித உரிமை பெற்று வாழ முற்பட வேண்டும். அன்றே அப்பேய்மை ஒழியும். அதுவன்றி வீண் ஆர்ப்பாட்டங்களும், வெற்றுரைகளும் பயன்தரா,

தீண்டாமைக்கு ஆளான மக்கள் பல்லாயிரம்பேர் இந்நாட்டில் வதிகிறார்கள். அவர்களால் பல சங்கங்கள் காணப்பட்டுள்ளன. நம் நாட்டைப் போல் அவர்களை பொது ரஸ்தாக்களில் நடக்க வொட்டாமலும், பொது கிணறுகளில், குளங்களில் தண்ணீர் மொள்ள வொட்டாமலும் மறிப்பாரில்லை. எனினும் அவர்களைத் தாழ்த்தப் பட்டவர்கள் எனத் தாழ்மையாய்க் கருதுவோர் இல்லாமலில்லை. அவர்கள் மனம் மாற்றம் பெறச் செய்தல் வேண்டும்.

கோயில்கள்

ஆண்டவன் வழிப்பாட்டிற்கு ஆலயந்தேவை என ஆண்டு தோறும், புது புது ஆலயங்கள் நாட்டிடைக் கட்டப்படுகின்றன. பண்டு ஆலயம் இல்லை என்பது சரித்திரக் காரர்களின் துணிபு. ஆரியரின் குடியேற்றத்திற்குப் பின்னரே ஆலயங்கள் தோன்றலாயின. நாளா வட்டத்தில் மல்கின. இன்று நாட்டிற்கு தீங்கிழைத்து நிற்கின்றன. காமிகள் கூத்தாடும் நிலையங்களாகவும், கள்ளர் குகைகளாகவும் இன்று அவை நிற்பதை மறுப்பார் யாருமில்லை. அறியாமையையும், கூடா ஒழுக்கங்களையும், பெருகச் செய்தது கோயில்கள். அறிவீனத்திற்கு அத்தாட்சியாய் நிற்பவை ஆலயங்கள். அறியாமை, கூடா ஒழுக்கம், அறிவீனம் இம்மூன்றும் ஒழியுங்காலத்து ஆலயங்களும் தானே வீழ்ந்து படும்.

கண்டவர்க்கெல்லாம்பெண்டாட்டியாயிருந்து காசு பரித்த வேசையர்கள் கட்டிய கோயில்கள் எத்தனை? பவுன் வாகனங்கள், எத்தனை, வெள்ளி ரதங்கள் எத்தனை. ஏழை எளியோரைக் கெடுத்து. ஊராரைக்கொள்ளை யிட்டுக் கொடும் பாவிகள்கட்டிய கோயில்கள் எத்தனை? வெட்டிய குளங்கள் எத்தனை? கள்விற்று ஏழைகள் பணத்தைக் கொள்ளையிட்டோர் கட்டிய கோயில்கள்எத்தனை? அமைத்த மடங்களெத்தனை? என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். கூடா ஒழுக்கங்களால் நிலை நாட்டப் பெற்ற கோயில்கள் எத்தனை என்பது உங்கட்குப் புலனாகும். ஒழுக்க ஈனங்களுக்கு துணை நிற்கும் ஆலயங்களோ "அறிவுடை"யோர் போற்றற்குரியன. ஒழுக்க ஈனங்கள் ஒழிக்கப்படும் காலையில் அவைகளில் உயிர் வாழும் ஆலயங்கள் தரை மட்டமாக்கப்பட மாட்டாவோ.

5000 வருடமாய் கற்றதென்ன.

இக் கோயில்களைப் போன்று நம் நாட்டிற்கு ஆரியர்களால் இழைக்கப் பட்ட தீங்குகள் அனந்தம். வருணச் சிரமமும், அதை நிலை நாட்டும் வேதப் புராணங்களும் அவர்கள் உண்டாக்கியவை. இவர்கள் நம் நாட்டில் குடியேறியது 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்பது சரித்திரச்சான்று. இந்த ஐயாயிர வருடமாய் ஆரியர் போதித்த தென்ன. கன்னத்தில் போட்டுக் கொள்ளுதலும், கசரத் தெடுப்பதுந்தானே.

உச்சிக் குடுமியும் பூணூலும் போட்டுக் கொண்டோர் தம்மை ஆசிரியர் எனச் சொல்லித் திரிகிறார்கள் விபசாரத்தையே தலையாய்க் கொண்ட ஆசிரியர்கள் எவ்வாதாரங்கள் கொண்டு அன்று புகுந்த ஆரியர் தான் தாங்கள் எனக்கூறிக் கொள்ளுகிறார்களோ அறியோம். வீராங்கனைகள் வாழ்ந்த நாட்டில் விபசாரத்தை புகுத்தி அரசர்களை அடிமை கொண்டு மல்கிய ஆரியர் கூட்டச்சந்ததியாரே இன்று நாட்டில் திரிபவர். இவர்கள் புகுத்திய பொய்மைகளும் மறவினைகளும் நாட்டைக் கெடுத்தன, மனிதர் அறிவைக் குலைத்தன.

ஜாதிக்கொடுமை.

சென்னை கல்விபிலாக்கா டைரக்டர் தீண்டாதார் நிலைமையைப் பற்றி, தமது சென்ற வருஷத்திய ரிப்போர்ட்டில் கூறியிருப்பதாவது:—

எல்லாப்பள்ளிக் கூடங்களிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்குப் பிரவேசனம் அளிப்பதே சர்க்காரின்ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாயிருந்தாலும் கட்டாயக் கல்விமுறை அமுலுக்குக்கொண்டு வரப்படும்போது சர்க்கார் கொள்கைக்கு முட்டுக்கட்டை விழுவது வாடிக்கையாக இருக்கிறது. மைதாபேட்டை தாலூகாவில் சில பள்ளிக்கூடங்களில் ஆதிதிராவிட மாணவர்கள் பிரவேசித்ததுமூலம் ஆதிதிராவிட சமூகத்துக்கே பெரிய ஆபத்துண்டாயிற்று. ஜாதி இந்துக்கள் ஆதிதிராவிடர்களை பகிஷ்கரித்ததினால் அவர்கள் செல்வ நிலைக்கே பெரிய பாதகம் ஏற்பட்டது. ஆதிதிராவிடப்பெற்றோர்கள் வயிற்றுப்பிழப்பை இழந்ததுடன் கடைக்காரரும் கூட அவர்களுக்குத்தேவையான சாமான்கள் விற்கமறுத்துவிட்டனர். ஆதிதிராவிடர்களுக்கென தனிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது கல்விச்சார்பாகவும், பொருளாதாரச்சார்பாகவும் தப்பான ஏற்பாடாகும். சர்க்காரின் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைக்கும் அது முரணானது. ஜாதிதுவேஷம் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும்வரை சர்க்கார் அதிகாரிகளும், ஏனையோரும் எவ்வளவு அந்தரங்க சுத்தியோடு முயற்சி செய்தாலும் சரி, கட்டாயக்கல்வி முறையினால் எத்தகைய நலனும் விளையப்போவதில்லை. இந்த ஜாதி துவேஷம் சைதாப்பேட்டை தாலூக்காவில் மட்டும் காணப்படும் ஒரு கொடுமையல்ல. தென்னாடு முழுதும் இது சர்வ வியாபகமாகவே இருந்துவருகிறது. மெட்டிலுள்ள 17,857 சர்க்கார் ஆரம்பப்பள்ளிக்கூடங்களில்7267 பள்ளிக்கூடங்களில் மட்டுமே ஆதிதிராவிட மாணவர்கள் தாராளமாகப் பிரவேசனம் பெற்று வருகிறார்கள். 122 பள்ளிக்கூடங்கள் அக்ரகாரங்களிலும், 163 பள்ளிக்கூடங்கள் வாடகைக்கட்டிடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஆதிதிராவிட மாணவர்கள் கண்ணெடுத்தும் பார்க்கமுடியாது. பொதுத் தொகுதிகளிலும், பிரஜைகளின்சம அந்தஸ்திலும், உரிமைகளிலும் பற்றி பேசுவோர் இவ்விஷயங்களை நன்கு கவனிப்பார்களாக! இந்தக்கொடுமைகளுக்காக சர்க்காரை குறை கூறுவதில் எள்ளளவு பயனுமில்லை. 1930ல் இது விஷயமாக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் ஒரு உத்தரவு அனுப்பினார்கள். அது பின்வருமாறு.

சில இடங்களில்உயர்ந்த ஜாதி இந்துக்கள் ஆட்சேபம் கூறியதால் ஆதிதிராவிடர்களுக்கென தீராப்பொறியாக தனிப்பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்கும்படி கேர்ந்திருக்கின்றன. ஆனாலும் பொதுப்பள்ளிக்கூடங்களில் ஆதிதிராவிடமாணவர்களுக்குத்தாராளமாகப்பிரவேசனமளித்து இந்த எதிர்ப்பை ஒழிக்க ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் தீவிர முயற்சி செய்யவேண்டும் ஆதிதிராவிட மாணவர்களுக்குப் பிரவேசனமளித்த காரணத்தால் உயர்ந்த ஜாதி இந்துக்கள் பள்ளிக்கூடங்களை பகிஷ்காரம் செய்தால் அதைப்பார்த்து அதிகாரிகள் அஞ்சக்கூடாதென்றும், உயர்ந்த ஜாதியாருக்கு பயந்து ஆதிதிராவிடமாணவர்களைப் பள்ளிக்கூடங்களிலிருந்து ஓட்டிவிடக்கூடாதென்றும் சர்க்கார் மேலும். வற்புறுத்தியிருந்தார்கள் கிராமங்களிலுள்ள உயர்ந்தஜாதியார் பணியும்வரை ஆதிதிராவிட மாணவருக்குப் பிரவேசனம் அளித்துக்கொண்டே வரவேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது நயவார்த்தைகளால் ஜாதிதுவேஷத்தை ஒழிக்க ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் பிரத்தியேக சிரமம் செய்யவேண்டும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து, அதில் ஒருபாகமாத்திரையைக்கொண்டுள்ளது (1\120 of an Inch) என அறிக. இந்த அறபவுருவந்தான் புத்தராகவும், ஏசுவாகவும், மகமதாகவும், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகராகவும் பரிணமித்தது. உலகில் இன்று வசித்துவரும் பல கோடி சீவராசிகள் ஆதியில் இச்சிறு மூட்டையிலிருந்து பரிணமித்தவைகள் என்றால் அந்த ஆதி மூட்டை (Primitive Cell) ஆதியில் எங்கிருந்து பெறப்பட்டு இருக்கலாமெனக்கேட்கலாம்? இதற்குயிலை அளிக்கத்தான் பிராணவிஞ்ஞானிகளும் (Biologists) பூத பௌதிக விஞ்ஞானிகளும் (Physico-Chemists) ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் கண்டறியப்பாடுபட்டுவருகின்றார்கள். இதன் ரகசியம் எந்தக்காலத்தில் விளங்கினாலும் விளங்கட்டும். இப்பொழுது தெரிந்தவரையில் எல்லா உயிர்களும் சிறு கிருமியாகிய மூட்டையிலிருந்தே உண்டாகின்றன. இரண்டாவது எல்லா உயிர்களும் நாளடைவில் ஆதிகால உயிர்களிலிருந்து பெறப்பட்டவை. தற்கால உயிர்கள் முற்கால உயிர்களிலிருந்தும், முற்கால உயிர்கள் அவைகளுக்கும் சிறிய உயிர்களிலிருந்தும்உண்டாயினவை. அத்தியாதி சிறிய உயிர்கள் ஆதியில் சிறுசிறு முட்டைகளிலிருந்து பெறப்பட்டிருக்கவேண்டும். அச்சிறுமுட்டைகள் ஓர் சிறிய ஆதி முட்டையிலிருந்து வளர்ந்திருக்க வேண்டும். அந்த ஆதிமுட்டை (Primordial Cell) அதற்கும் சிறிய முட்டையிலிருந்தும் (Bacteria, Viruses)இவைபோன்ற உயிரும் உயிருமில்லாதப் பொருள்களிலிருந்து உற்பத்தியாய் இருக்கலாமென்பதுதற்கால மெஞ்ஞானயுக்தி என்று சொல்லலாம். உலகம் ஒரு காலத்தில் உயிரற்று இருந்தது. உயிர் முளைக்க உலகம் பக்குவமடைந்தகாலையில் கல்லாய்ட் (Colloid) என்ற குழப்பிய பதார்த்தங்கள் உண்டாயிருக்க வேண்டும். அந்தப் பதார்த்தங்களிலிருந்து பிரோடபிலாசம் (Protoplasm) என்ற

ஆதி உயிர்கல்லாய்ட்டப் பொருள் பிறந்தது. அதிலிருந்து ஆதிமூட்டை (Primitiue Cell) உண்டாகி அதுபரிணமித்து பலவேறு உயிர்களாக பரிணமித்தன என்பது மெஞ்ஞான யூகை.

நமது இரங்கூன் நிருபர் கேள்விக்கு (முட்டை முந்தியதா? அல்லது கோழி முந்தியதா?, என்ன விடை எனில் தற்கால கோழி பூர்வகால காட்டுக்கோழியிலிருந்து பெறப்பட்டது. ஆதிகோழி ஆதிபட்சியிலொன்று. ஆதிபட்சி, ரின் கோ ஸெ பெ ல ஸ் (Rhyncocephalus) என்ற ஊர்வனத்திலொன்று. இதைப்போன்று மேல் குறித்தவண்ணம் ஆதி தவளை, ஆதி மீன், ஆதிபுழு முதலிய உருவங்களிலிருந்து இவைகள் பலமுட்டை உருவங்களிருந்தும், பல முட்டைகளில்ஒருமுட்டை உயிரிலிருந்து அந்த ஆதி முட்டையும் அந்தக்காலத்து சில ரசாயனப்பொருள்களாகிய பொட்டாசியம் (Potassium) நிமுறி பாஷாணம் (Phosferous) இரும்பு (Iron) கரி (Carbon) முதலியவைகளால் சையோகப்பட்டு வந்திருக்கவேண்டும். எனெனில் எல்லா உயிர்முட்டைகளும் மேற்கூறிய வஸ்துக்களால் ஆக்கப்பட்டிருப்பதால் இவைகளுக்கெல்லாம் ஆதி முட்டையும், இந்த வஸ்துக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கலாமென்பது அனுமானம். தற்கால முட்டையும், கோழியும், ஒருகாலத்திலில்லாமலிருந்தன. ஆதலின் கோழியும் அதன் முட்டையும் முதலன்று. அவைகளுக்கெல்லாம் முதல் நமது உலகிலுள்ளதாதுக்களே. இந்த மூலதாதுக்கள் எங்கிருந்து வந்தன? சூர்யனிடத்திருந்து வந்தன. சூர்யன் எங்கு இருந்து வந்தது? இதைவான நூலில் தெரிந்துகொள்ளலாம். ஆதலின் நீரும் நானும் நமது நிருபரும் சகல உயிர்களும் மண்ணிலிருந்தே பிறந்து, கடைசியிலொருபிடி மண்ணாக ஆவதே உலக அனுபவம். இந்த அனுபவத்தை எண்ணியாகிலும், நம்மை சுற்றிவாழும் பாமர மக்களை வஞ்சியாது, அவர்களுக்கு உண்மை ஞானத்தை உரைத்து, அவர்களை புனிதர்களாக்க முயல்வோமாக! இந்த உயர்ந்த ஞானமாகிய பரிணாமத்தை இவ்விடம் சுருக்கமாக உறைக்கச்சந்தர்ப்பமளித்த நமது தோழர் இரங்கூன் நிருபரைப் பாட்டுகிறோம்.

மதிப்புரைகள்.

ஆதிதிராவிடர் இந்துக்களா:—என்ற புஸ்தகமொன்று திரு ஜி. டி. ராஜன் அவர்களால் எழுதப்பட்டு நமது பார்வைக்கு வந்துளது. இதன் ஆசிரியர் மிகவும் தெளிவான முறையில் ஆதிதிராவிடர் ஹிந்துக்கள் அல்ல வென்றும், அவ்வாறு அவர்கள் ஹிந்துக்களாயின் அவர்களது ஜீவாதார உரிமைகள் மறுக்கப்படக் காரணமில்லை யென்றும், நடுவில் சுயநலமும், சூட்சியும் நிறைந்த கூட்டத்தார் உண்டாக்கிய கற்பனை என்பதையும் விளக்கி, ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருப்பவைகளனைத்தையும் வெட்டி வீழ்த்தி வாலிபர்கள் தீவிரமாய் உழைக்க வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தியிருக்கிறார் ஆதிதிராவிடர் முன்னேற்றத்தில் ஆர்வமுள்ளாரனைவரும் படிக்க வேண்டியதவசியம். விலை அணா. 1. கிடைக்குமிடம்.

எம். ஆசி மூலம், காரியதரிசி.
ஆதிதிராவிட அபிவிர்த்தி சங்கம்,
ஆம்பூர்

தமிழ் மகன் தன்மதிப்புப் பாடல்:—மதுரை திரு. வீ. மு. பொன்னய்யா அவர்களால்இயற்றப்பட்ட மேற்கண்ட புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். திரு. பொன்னையா அவர்களை சீர்திருத்த உலகில் அறியாதார் மிகச்சிலரே. திரு. பொன்னையா அவர்கள் இயற்றமிழும், இசைத் தமிழும் ஒருங்கே கற்றவர். சுயமரியாதை வீரர். சீர்திருத்த அவாவுடையார் மேற்கண்ட தனது புத்தகத்தில் இனிமையானதமிழில்அர்த்த புஷ்டியோடு, சாதி, சமய, வேத புரட்டுகளையும், இன்ப வாழ்வுக்குரிய சீரிய வழிகளையும் நயம்பட இயற்றியுளார். சீர்திருத்த அவாவும், சுயமரியாதை அபிமானமும் கொண்ட ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம். 20, பக்கங்கள் கொண்டது.

விலை பைசா 0—0—6

கிடைக்குமிடம்.

வீ. மு. பொன்னையன்,
321. அழகரடி,
மதுரை.

இந்திய ஒளி:—திருச்சி ஜனப் கே. ஏ. அப்துல் ஹமீது சாகிப் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'இந்திய ஒளி' என்ற மாத சஞ்சிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். முஸ்லீம்கள் முன்னேற்றத்தையும், சீர்திருத்தத்தையும்மூட பழக்க வழக்கங்களை ஒழிப்பதன் அவசியத்தையும் வற்புறுத்தி அனேகக்கட்டுரைகள் காணப்படுவதோடு சீர்திருத்த நெறி பற்றிய அனேக வியாசங்களும் காலத்திற் கொத்தவாறு நவீன முறையில் எழுதப்பட்டுள்ளன. சமூக விடுதலையிலும், மக்களது அந்தகாரத்தையும், மடமையையும் நீக்கி ஒளியை உண்டாக்குவதில் "இந்திய ஒளி" தன் கடனாற்றுமென்றே இதை வரவேற்கிறோம். முஸ்லீம்களும், எனையோரும் இதை ஆதரிக்க வேண்டுகிறோம்.

வருட சந்தா, ரூ.1—4—0.

மானேஜர்,
"இந்திய ஒளி"
திருச்சி.

ஜன மித்திரன்.

ஈரோடு திரு. ஈ. பி. வெங்கடாசலம் அவர்களால் வாரம் ஒரு முறை பிரசுரிக்கப்படும் "ஜன மித்திரன்" என்னும் பத்திரிகையின் முதல் நான்கு இதழ்கள் வரப் பெற்றோம். இதன் முதல் இதழில் 'ஜன மித்திரன் எழைகளின் சுகதுக்கம் தன்னுடையதாகக் கொண்டும், நிகற்ற ஏழைகளின் கேஷமத்தையே குறியாகக் கொண்டும் தொண்டாற்றுவான்" என்றும் குறிப்பிடப் பட்டிருக்கின்றவாறு இப்பத்திரிகை நகரமக்களின் நன்மையையே குறிக்கொண்டு நடைபெறுமாயின் உண்மையில் 'ஜனமித்திரன்' ஜனமித்திரனாகவே விளங்கும். ஆகவே இப்பத்திரிகை கட்சிவிவாதங்களில் தலையிட்டுக்கொள்ளாமல் நகரநலம் ஒன்றையே கருதி நகர மக்களுக்கு நன்மை செய்யும் துறையில் உழைக்கும் என எதிர்பார்க்கிறோம். இதன் தனிப்பிரதி 3-பைசா, வருஷ சந்தா உள்ளூருக்கு 12 அணா. வெளியூருக்கு ரூ. 1—8—0.

மானேஜர்
"ஜனமித்திரன்" ஈரோடு.

புது வருடக் கியாலண்டர்கள்.

கீழ் கண்டவர்களிடமிருந்து புது வருடக் கியாலண்டர்கள் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

கல்கத்தா, கேஞ்ஞஸ் பிரிண்டிங் இங்க் தொழிற்சாலை.

கோயம்புத்தூர் நெல்சன் பல்வைத்திய சாலை.

பழனி நித்தியானந்த வைத்திய சாலை.

சென்னை பிரிட்டிஷ் இந்தியா பேப்பர் கம்பெனி.

சென்னைகொளத்தூர் சமதருமஅபிவிர்த்திசங்கம்.

(2-1-32) ஞாயிற்றுகிழமைமாலைமணிக்கு கொளத்தூர் கீழண்டைவீதியில் ஷைசங்கஸ்தாபகர், திருவாளர், மகாமதுரகவி வி. வி. முருகேச பாகவதரவர்கள் தலைமையில் ஒருபொதுக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் சங்கத்தலைவர் எல். ஆறுமுகம், கௌரவகாரிய வமைச்சர் ஆர். தானியல், ஐக்யநாணய சங்க, செக்ரடெரி, பி. முனிசாமி. வி. என். பி. சாரதிராவ் இவர்களால், சீர்திருத்தப்பிரசங்கங்கள். நடந்தபின், சபாநாயகர் முடிவுரையில், சமதருமம், சுயமரியாதை, கல்வி, வொற்றுமை, நம்மவர்கள் யூனியன் போர்டுகளில் ஸ்தானம்வகிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும், இவ்வூரில் ஒருஇரவு பள்ளிக்கூடம் எற்படுத்தவும், முடிவுசெய்தபின். இரவு 8மணிக்கு கூட்டம்கலைந்ததென, காரியதர்வா கஸ்தர்எழுதுகிறார்.

திண்டுக்கல் சுயமரியாதைச்சங்கம்.

நாளது பிப்ரவரிமீ 24உ புதன் கிழமை மாலை 5 மணிக்கு சிங்கர் கம்பெனி மானேஜர் அவர்கள் ஆபீசில் கூடி பல தீர்மானங்கள் நிறைவேறியதில் அடியில்கண்ட தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறியது

செட்டிநாட்டு திரு. கனய் ராவ் பகதூர் எல். ஆர். எம். எம். சி. டி. சபாரெத்தினம் செட்டியாரவர்களும் லால்குடி ஹைஸ்கூல் ஆதித்திராவிட மாணவர்களின் போஜனத்திற்கும். முன்னேற்றத்திற்கும், நன்கொடையாக ரூ. 10000 நன்கொடை அளித்ததுகண்டு இச்சங்கம் அளவிழா மகிழ்ச்சி அடைகிறது என காரியதரிசி எழுதுகிறார்.

ஏஜண்டுகள் தேவை

நமது பத்திரிகைக்குக் கீழ்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சேலம்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
உடுமலைப்பேட்டை.
தஞ்சாவூர்.
களிக்கோட்டை.
திருவனந்தபுரம்.
ஜோலார்ப்பேட்டை.
கண்ணிலம்.
பரமக்குடி.
கரூர்.
திருமங்கலம்.

பிரிண்டர் அண்டு பப்ளிஷர்
"குடி அரசு" ஈரோடு

"கொடுமை, தீண்டாமை யின் கொடுமை"

[தோம்பக்குளம் தோழர் டி. பெருமாள்சாமி]

தீண்டாமை யென்பது, தேள், பாம்பு போன்ற விஷப் பிராணிகளைத் தொட்டால் மனிதனுக்கு அநேக கஷ்டங்கள் நேரிடுமென வஞ்சி அக் கொடிய ஜந்துக்களைத் தீண்டக் கூடாது என்பது பொருந்தும் நம்மைப் போன்றே சகல நல்குணவுகளையும் புசித்து பகுத்தறிவு படைத்த மனிதனை, ஓர் மனிதன் தீண்டக் கூடாது, தொடக்கூடாது என்முல் அதைக்காட்டி-லும் கொடுமை இவ்வுலகத்தில் வேறேதனு முண்டோ? பகுத்தறிவுள்ள மனித சமூகத்திற்கு இது பொருந்துமா? என்று தான் கேட்கின்றேன்.

"இவ்விதமாகத் தொடாதே? என்ற சொல்லை எவனொருவன் உச்சரிக்கின்றானே அவன் இரக்க முடையவனாகவே இருக்க முடியாது. "தொடாதே" தொட்டால் தீட்டாகி விடுவேன் என்று பேசும் மனிதன் மனிதனாகான். மனிதத் தன்மையை விட்டு அப்போதே அவன் வெகு தூரம் சென்று விட்டானென்பதில் சந்தேகமில்லை. பிறர் தன்னைத் தொடக்கூடா தென்முல், தான் பிறரைத் தொடத் தயாராகயிருக்க முடியாதென்பது நிச்சயம் இந்த எண்ணமுடையவர்கள் மற்றொரு ஜாதி மனிதனை, குழந்தையோ கிணற்றில் விழுந்தோ அல்லது வேறொரு அபாயத்திலகப் பட்டு அவனுக்கு நேரே பரதவித்தாலும் அவர்களைத் தன் கையினால் தொட்டு எடுத்துதவி செய்ய முன் வர மாட்டான் ஏன்? தொட்டால் தான் உடனே தீட்டு வந்து பிடித்துக் கொள்ளுமே" இந்தக் கொடுந்தீட்டெனும் பேயானது மக்களை விட்டுத் தொலைந்தாலல்லவா? நம் மக்கள் சுகப்படப் போகிறார்கள்? இந்தத் தீண்டாமை என்பது பஞ்சமர், தீண்டத் தகாதாரென்று சொல்லப்படும் மக்களிடத்தில் மட்டுந்தான் காட்டப்படுகிறதென்ப தன்று. அது இந்து மக்கள் யாவரிடத்தும்பரவி இந்துக் கோயில்கள், சுவாமிகள், சாஸ்திரங்கள், மந்திரங்கள் முதலிய எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் நுழைந்து விட்டதோடல்லாமல் இந்து மதமே தீண்டாமை மதமாகப்போய் விட்ட தெனினுமது மிகையாகாது. நம் நாட்டில் தீண்டத் தகாதவர்களென்றே சுமார் 7 கோடி ஜனங்கள் மட்டும் தனித்து இருக்கின்றனரென்று கருதப்படுகின்றது. உண்மை அப்படியல்ல பார்ப்பன ஜாதியை எடுத்துக் கொண்டால், பார்ப்பனரல்லாத சகல ஜாதியாரும் தீண்டாதவரா கக் கருதப் படுவதைக் காணலாம் அப்படியே இந்தச் சைவர்களும் மற்ற ஜாதியாரைத் தமக்குத் தாழ்ந்தவரென்றும், அவர்களைத் தொட்டால் தீட்டாகுமென்றுங் கருதுகின்றனர். இப்படியே ஒவ்வொரு ஜாதியாரும் பிறப்பாலும், ஆசாரத்தாலும், தங்களைத் தாங்களே சிறந்தவரெனக்கருதி, மற்ற வர்களைப் பார்த்துத் தொடாதே" என்று சொல்ல முன் வருகின்றனர். இவ்வாறுகப் பார்ப்பன ஜாதியிலிருந்து ஒவ்வொரு ஜாதியாகப் பார்த்தால் ஒருவரை யொருவர் தீண்டக்கூடாதவராகவே இருப்பதைக் காண்டல் அரிதன்று. பார்ப்பனருள்ளும் ஒருவரை யொருவர் தொடக்கூடா தென்றும், ஒருவர் சாப்பிடுவதை மற்றவர் பார்க்கக் கூடாதென்றும், சமைத்துப் போடக்கூடா தென்றும் சாப்பாட்டைத்தொடக்கூடா தென்னும் கொள்கைகள் வைத்திருக்கின்றனர். அவருள்ளும் தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதிகளு மிருக்கின்றன. தங்களை விடத் தாழ்ந்த ஜாதியாரென்றுகருதப்படுபவர், மேல்ஜாதியாரைத் தொட்டு விடடால் பாவமென்று கருதுவதால், எப்படியும் ஒரு வகுப்பினரை-மற்றவகுப்பினர் தீண்டக்கூடா தென்ற உணர்ச்சி தழும்பேறி நிற்கின்றது, இத்தீண்டாமைக் கொள்கையானது, மனிதனிடத்து மட்டும் ஏற்பட்டதோடு நிற்கவில்லை. சாமியைத் தொட்டாலும், கோவில் நுழைந்தாலும், பாடசாலை, சத்திரங்களில் புகுந்தாலும் தீட்டாகு மென்ற நிலைமை வரைக்கும் வந்திருக்கிறது. வந்து விட்டது. உதாரணமாக சமீபத்தில் கூட மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில்; ஓர் வண்ணாரத் தலைவர் உள்ளே சென்று கிளிக்கூண்டு மண்டபம் வரைக்கும் போய்விட்டதாகவும், உடனே அந்தக் கோவிலில் தீட்டமைந்து விட்டதென்றும், அந்தத் தீட்டைக் கழிக்க கோவில் காரியஸ்தர்கள் அந்த வண்ணாரத் தலைவரிடத்தில் ரூ. 10 அணு 8 வாங்கி விட்டதாகவும் பத்திரிகைகளில் எழுதி வந்ததை சகல நண்பர்கள் எல்லோரும் படித்துப் பார்த்திருக்கலாம். ஆனால் வண்ணாரத் தலைவர் கோவிலிற்குள் போனதும், உடனே தீட்டு வந்து பற்றிக் கொண்டதும், அத்தீட்டு பத்தரை ரூபாய்க்குள் இலகுவில் ஓடிப்போனதும் விந்தையே. நிட்டென்பது பத்தரை ரூபாய்க்குள்ளேமுடியுமானால் இது விந்தையினும்!!.....ஆனால் இதிலிருந்து என்ன தெரிகிறதெனில், மதுரை மீனாட்சி கோவில் தீழவாசலிலிருந்து கிளிக் கூண்டு மண்டபம் வரைக்குமுள்ள தூரத்துக்கு தீட்டு பரிகாரச்சிலவு ரூ. 10-8-0 ஆனால் அந்த அளவில் கெஜத்துக்கு என்ன செலவு ரூ. அ. பை ஏற்படுகிறதென்று கணக்குப் பார்த்துக் கொண்டு அந்த விகிதப்படியே கிளிக் கூண்டு மண்டபத்திலிருந்து மூல ஸ்தனம் மீனாட்சி விக்கிரகம் வரைக்கும் - இஞ்சு டேப் ஒன்றினால் அளந்து உள்ள அஜத்துக்கு கணக்குப் பெருக்கி வந்த தொகையை அதற்கேற்பட்ட காரியஸ்தர்களிடத்திலோ, டிரஸ்டிகளிடத்திலோ செலுத்தி "லசென்ஸ்" வாங்கி கையில் வைத்துக் கொண்டு எந்தச்சாதி பள்ளச் சுப்பனை, வள்ளுவனை கோவில் மூலஸ்தானம் வரைக்கும் தாராளமாகப் போய் வரலாமென்பது தானே கருத்து வெட்கம்! வெட்கம்!! ஆனால் இத்தீண்டாமையின் கொடுமையானது இத்துடன் நின்றதா? இல்லை, இல்லை. இன்னும் கீழ் மேல் ஜாதி பிரித்து ஒருவரை ஒருவர் தொட்டாலும், பார்த்தாலும், பாதை வழி நடந்தாலும், தீட்டாகுமென்ற எண்ணம் வளர்ந்தின் பயனாக, ஒருவர்க்கொருவர் தொடக்கூடாத அளவு நீக்கப் பட்டவர் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. இது நாளடைவில் வழக்கமாகி, ஒரு ஜாதிக்கொரு ஜாதி கொடுமையான பகைமையையும், அலட்சியத்தையும், அசிங்கத்தையும் வளர்த்து சகோதரத் தன்மையை வேரறக் கல்லி மாய்த்து விட்டது. இந்தப் பேதமை உணர்ச்சியைச் சாஸ்திர ஆதாரத்துடன், மதக் கொள்கைகளோடு சேர்த்துக் கடவுளின் சம்மத மென்று பிரசாரஞ் செய்து மக்களைக் கட்டுப் படுத்தியதின் பயனாகப் பார்ப்பனர் உயர் ஸ்தானத்தையும், பொருள் வருவாயையும் ஏனைய சுக சௌகரியங்களையும் அடைந்தாலும் நாட்டு மக்கள் அத்தனை பேரும் வீண் காலம் கடத்தி ஒற்றுமை கெட்டு, வீழ்ந்து ஜாதி ஒரே ஜாதி, ஒரே மதத்திற்குரிய மக்கள் என்ற உணர்வற்று ஒருவருக் கொருர் முகங்கண்டவுடன் உயர்வு தாழ்வுச் சண்டையிலீடுபடும்படியான பரிதாப நிலையை அடைந்து விட்டனர். தீண்டக் கூடாது, தொடக்கூடாது என்ற சொல் இந்து மக்களிடத்தில் வழக்கத்திற் கூட இல்லாதபடி அழிகிறவரை இச்சமூகம் ஒரு அறிவுள்ள சமூகமென்று உலகினரால் கருதப்படப் போவதில்லை யென்பதும் எதாவது ஒரு தொழிலுக்கோ, அபிவிருத்திக்கோ, நாட்டு ஆட்சிக்கோ வேறு சிறந்த காரியங்கட்கோ முன்னின்று மேன்மை பெற வழியேற்படப் போவதில்லை. ஆனதால் உண்மைச் சுயமரியாதை நண்பர்களே! வாலிப இளஞ்சிங்கங்களே!! இக்கொடிய தீண்டாமையையும், குருட்டுப் பழக்க வழக்கத்தையும், மதத்தையும் ஆணி வேரற வெட்டி வீழ்த்தி, யாண்டும் ஜீவகாருண்யம் பொங்கிச் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், வீரம், பகுத்தறிவுமுதலிய உணர்ச்சிகளை உண்டாக்க முன் வருவீர்க ளென்பதாகவும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தகடைக்குப்போய் விட்டார். ஆனால் ஒரு விசேஷம், போகும்பொழுது என்னைத்திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே போனார். எங்கு ஒருசமயம் நம் பின்னலேயே வருகிறானே! என்னமோ! என்று பார்த்துக்கொண்டு போனர்போலும் இல்லை இல்லை அப்படி நினைத்தவாகத்தான் இருந்தது. சரி, சரி போதும் பிறகு பார்த்துக்கொள்ளலாம். இன்னும் நான்கண்ட உண்மைகள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் எழுத ஆரம்பித்தால் 'குடி அரசு' சிறுவன் கண்டிப்பாயிடம்தரான். என்னைப்போலுள்ள 'சீனியர்' வெடிகளுக்கெல்லாம் இடம் கொடுத்துதானே பிறகு ஜூனியர்'ரான எனக்கு இடம் கொடுப்பான். அநேகமாக அடுத்தவாரமாவது என்னை வெடிக்கவிடுவான். அப்படிபாடம் கொடுத்தாலுலல் அவனுக்கும் வந்தனம். பொருமையுடன் படிக்கும் உங்களுக்கும் வந்தனம். அடுத்தபடியாக வெடிக்கும் தினத்தை கவனியுங்கள். கடைசி வந்தனம் பிறகு பார்த்துக்கொள்வோம்.

இந்தியப் பெண் மக்களின் அபிவிருத்தி.

(எஸ். எஸ். ஆனந்தம்.)

'பெண்கல்வி' என்பதைப் பற்றியும், அதன் அவசியத்தைப்பற்றியும் விரிவுரை எழுதவேண்டியது அவசியமாகத் தோன்றினதினால் ஷை தலையங்கத்தைப்பற்றி எனக்குத்தெரிந்தவரையில் எழுதுகிறேன். குற்றங் குறைகள் இருப்பினும் வாசகர்கள் அவைகளைக்குணமாகக்கொண்டு என்னை ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

தற்கால நாகரீகத்தில் பெண் கல்வியின் அபிவிருத்தியைப்பற்றி எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக்கலாம். தற்கால பெண்கல்வியின் அபிவிருத்தியை நோக்கிப் பேசுங்கால் முற்காலத்திய நிலைமையைச் சிறிது ஆராயவேண்டியது முக்கியமாகத்தோன்றுகிறது. முற்காலத்திய பெண்கல்வியின் நிலையைப்பற்றி எனக்கு அனுபோகத்தில் தெரியாததால் முன்னோர்களுடைய அனுபவத்தை நாடியே அறிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. முடிவில் நம் மாகாணத்தில் கல்வி அபிவிருத்தியைப்பற்றி சற்று ஆராய்வோம்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பெண்கல்வியின் அபிவிருத்தியையும், தற்காலத்திய பெண்கல்வியின் அபிவிருத்தியையும் ஒப்பிட்டால் ஒரு பூனைக்கும், ஒரு யானைக்கும் உள்ள தாரதம்மியத்தை ஒக்கும். பழங்காலத்தில் சமஸ்தான ராஜாக்களின் உதவிகளால் ஆண்மக்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில்தான் சில பெண்மணிகள் அரிதாக சேர்ந்து படித்துவந்தார்கள். கொஞ்சம் நாள் ஆகஆக மதஸ்தாபகர்களால் பெண்பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டது. இந்தப்பாடசாலைகளில் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவுதான். இதன் வாயிலாக நாளுக்குநாள் பெண்கல்வியானது அபிவிருத்தி அடைய ஆரம்பித்தது. படிப்பில் நம் பெண்மணிகளுக்கு மனவெழுச்சி உண்டாகவே பிரிட்டிஷ் ஆசாங்கத்தாராலும் அநேக பேருதவிகளைப் பெற்றார்கள். ஆண்மக்களுக்கு கல்வி வளர்ச்சி எப்படி உண்டானதோ அதேபோல் நாளடைவில் பெண்கல்வியும் தலையெடுக்க ஆரம்பித்தது. ஆண்கல்வியின் ஆதிக்கம் பரவியதுபோல் பெண்கல்வியின் ஆதிக்கம் அவ்வளவு மேம்பாடாகப்பரவவில்லை. பழைய கிழக்குஇந்தியாகம்பெனியார்தங்கள்கம்பெனி உத்தியோகங்களுக்காக வேண்டி இந்துமக்களின் கல்வி அபிவிருத்தியில் ஊக்கங்கொண்டதும், பிற்காலத்தில் நம் இந்திய சிரோன்மணிகளே கல்வி இலாக்கா மந்திரியாக அமைக்கப்பெற்றதும் பெண் மக்களின் கல்வி அபிவிருத்திக்கு ஒரு பெரிய சாதனம் ஏற்பட்டது, நாளடைவில் உயர்தரப்படிப்புக்கும் பெண் பிள்ளைகள் அனுப்பப்பட்டார்கள்.

நாளுக்குநாள் மேலோட்டு நாகரீகம் விருத்தி அடைய நம் பெண்கள் அவைகளில் சிறிது ஈடுபட்டு உயர்தரப்படிப்பிலும் ஆசைவைத்தார்கள். பெண்களுக்கு இவ்வாறு ஒரு ஊக்கம் உண்டாகவே உயர்தரப்படிப்பானது வரவர விருத்தியாம்சத்திற்கு வந்தது. சுமார் 20 வருஷங்களுக்குமுன்பு படிப்பில் ஈடுபட்டுள்ள பெண்மக்களின் எண்ணிக்கையை இப்போதைய கல்வி அபிவிருத்தியில் தலைகாட்டியுள்ள மாணவிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் மிகக்குறைவு என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். தற்போது 100 ஆண்பிள்ளைகள் உயர்தரப் படிப்பில் ஈடுபட்டிருந்தால் 10 பேர் பெண்கள்இருப்பார்கள், பெண்பிள்ளைகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் கல்லூரிகளிலும் குறைவாகவேதான் இருக்கிறது. ஆனால் 20 வருஷங்களுக்குமுன்பு இருந்ததைவிட இப்போது மிக்கவிருத்தி அடைந்திருக்கிறது பெண்பிள்ளைகளுக்கென்று தனிப்பட்ட கல்லூரிகள் ஏற்பட்டது சமீப காலத்தில்தான். ஆண்களுக்கும், பெண்களுக்கும் அவர்களுடைய படிப்பு சம்மந்தப்பட்ட வரைபிலாவது அல்லது அவரவர்கள் பெறும் பட்டங்களிலாவது ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்று பார்த்தால் அப்படி ஒன்றும் இருப்பதாகத்தோன்றவில்லை. சர்வகலாசாலை நிர்வாகத்திலும் ஆண் பெண் என்ற வேற்றுமை இல்லை. நாம் இதுவரையிலும் சென்னை மாகாணத்தைப்பற்றியே பேசிஜேமேயல்லாது இதர மாகாணங்களைப்பற்றி பேசவில்லை. இதர மாகாணங்களிலும் 'பெண்கல்வி' அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. 1927ம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியாவில் பெண்களுக்காக 19 தொழிற்கல்விக்கல்லூரிகள் இருந்தது. 1920ம் வருஷத்திற்கு பிறகுதான் பெண் கல்வியின் வளர்ச்சி விருத்திஅடைய ஆரம்பித்தது. அதற்கு முக்கிய கர்த்தாக்கள் நம் இந்திய கல்வி இலாகா மந்திரிமார்கள்தான் தற்காலம் பெண்மணிகளின் உயர்தரப்படிப்பிற்கு ஏற்றதாக இருப்பதால் நாம் நம் பெண்மக்களை உயர்தரப்படிப்பிற்கும் அனுப்பி பெண் கல்வி அபிவிருத்தியை வளர்க்கவேண்டியது அவசியமாகும். மேற்சொன்னவைகளிலிருந்து பெண் கல்வியானது முற்றிலும் அபிவிருத்தி அடைந்துவிட்டதாகவாசகர்கள் உணராதபடி கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இப்போதுதான் அபிவிருத்தியில் கொஞ்சம் கண்பார்த்திருக்கிறார்கள். இதனிடையில் வைதீகக்குடுக்கைகளின் இடையூறுகள் பலஉள. இந்த நிலைமையிலேயே சாஸ்திரம் 'பாழாய் விட்டது' 'பிராமணதருமம் கெட்டுப்போய் விட்டது' என்றுகூச்சலிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பெண்மக்கள் கல்வியில் பூர்ண அபிவிருத்தி அடைந்து விட்டால் இந்த வெறுங் குடுக்கைகள் அடங்கியா இருக்கும். இந்த மூட்டுக்கட்டைகளை எல்லாம் தாண்டிஜலல்லவோ பூர்ண கல்வி அபிவிருத்தியையும் பெண் மணிகள் அடைவார்கள். இம்மூட்டுக்கட்டைகளை அகற்ற நம்மவர்கள் தங்களாலான சிரத்தையை எடுப்பார்கள் என உறுதியுடன் நம்புகிறேன்.

நிற்க, நாளடைவில் கல்வி அபிவிருத்தியடையநம்பெண்மணிகளுக்கு உத்தியோகம் வகிக்கும் தன்மையும் ஏற்பட்டு விட்டது. நம் பெண்கள் உத்தியோகம் வகிப்பது, பள்ளிக்கூட உபாத்தியாயினிகளாகவும், ஆஸ்பத்திரி மருத்துவத்திலும் தற்காலத்தில் அநேக பெண்மணிகள் சர்க்காரில் இன்னும் மேலான உத்தியோகங்களிலும் ஸ்தானம் பெறுகிறார்கள். சமீப காலத்தில் நம் பிரிட்டிஷ் சர்க்காராள் டில்லியில் பெண் போலீஸ் படை வேண்டுமென்று வெளியிடப்பட்ட அறிக்கையும் எல்லோருக்கும் அறிமுகமானதாகும். இதுவும் பெண் கல்வி வளர்ச்சி அடைவதற்கு தக்குந்த சாதகமாகும். இன்னும் தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சட்டசபை முதலியவைகளில் பெண்களுக்கென்று ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருக்கிறது எல்லாருக்கும் தெரிந்ததாகும். இதையும் பெண் மக்களின் முன்னேற்றத்தை உத்தேசித்தே செய்த காரியம். இவைகளின் மூலமாய் நம் இந்திய பெண் மக்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள ஏதுவாக இருக்கிறது. லண்டன் சர்வகட்சி மகாநாட்டிற்கு திருமதி. ராதாபாய் ப்பராயன் அவர்கள் இந்தியப்பெண்கள் பிரதிநிதியாகச்சென்று பெண்கள் சார்பாக அவர்கள் மன்றாடிப் பேசியதும் மிகவும் மெச்சத்தக்கதாகும்.

பின்னும் நம் சுயமரியாதை பெண்கள் மகாநாடுகளிலும், பெண்கள் முன்னேற்றத்துக்காக பரிந்து பேசிய பெண் மணிகள் எவ்வளவு பேர்? நமது இயக்கமும் இந்திய பெண் மக்கள் கல்வியில் முன்னேற்ற மடைந்து மிகுந்த உன்னதமேம்பாட்டை அடைவதற்காக இயன்ற மட்டும் பாடுபட்டு வருவதென்பது பகிரங்க விஷயம். இவைகளன்னியில் பெண்கல்வி தோச்சியடைவதற்கு எவ்வளவோ சாதகங்கள் இருக்கிறதென்பது வெளிப்படையாக உள்ளதாதலால் வீணில் வளர்த்திக்கொண்டு போவதில் பிரயோஜனமில்லை.

கடைசியாக நான் சொல்லப்போகிற வார்த்தை என்னவென்றால் வைதீகக்குடுக்கைகளின் வலையில் சிக்குண்டு நம் பெண் மணிகளை அடுப்பூதுவதற்கு மாத்திரம் ஒதுக்கி வைக்காது கல்வியிலும் மேம்பாட்டை அடையும்படி நாம் ஒத்துழைக்க வேண்டியது முக்கிய கடமையாகும் என்பதை வற்புறுத்திக்கூறுகிறேன். பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நம் கல்வி இலாகா மந்திரிகள் தங்களாலியன்ற உதவியை புரிந்து பெண் கல்வியை அபிவிருத்தியடையும்படி செய்து அவர்களது உலக முன்னேற்றத்திற்காகவும் கண் திறந்து பார்ப்பார்களென்று மிக்க உறுதியுடன் நம்புகிறேன்.

கலப்பு மணத்தால் தான் ஜாதி ஒழியும்.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்போது அத்தேசத்தில் சமூகம் முன்னேயக்காட்டிலும் பல்லாயிர மடங்கு முற்பட்டு நிற்கின்றது.

நாம்-இதுவரையும் கண்டு வந்த படி, எல்லாத் தேசங்களிலும் அந் நாட்டு மன்னர்களோ அரசாங்க மோ மதம் என்பதற்கஞ்சியும், மதம் என்பதன் போல் வழங்கிய கொ டிய பழக்கங்களை நீக்க முயலாம லும், இருந்துவந்ததாகத்தெரியவி ல்லை. எந்தத்தேசங்கள் தற்காலம் முன்னேற்றமடைந்திருக்கின்றனவோ, அவைகள் எல்லாவற்றிலும் 'மதம்' என்பதைக்கவனிக்காமலே சமூக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. ஆகவே இதனால் ஏற்படும் முடிவு என்னவென்றால் எந்த ஒருதேசம் முன்னேற்றமடைய வேண்டுமென அவாவுகின்றதோ அந்தத் தேசம் தனது மதம் எவ்வளவு சிறந்ததாயினும் அது முற்போக்கிற் கேதுவான சீர்திருத்தங்களுக்கிடங் கொடாமல் நிற்குமேல், அதைப்பற்றிச்சற்றும் கவனியாமல், மக்களின் உயர்வே முக்கிய நோக்கமாகக்கொண்டு அதற்குவேண்டிய முயற்சிகளைச்செய்யவேண்டும் என்பதேயாகும். எவ்வளவுக்கெவ்வளவு ஒரு தேசத்தின் அரசாங்கம் மதத்தின் கட்டுப்பாட்டினின்று விலகிநின்று சுயேச்சையாய்சீர்திருத்த முறைகளைக் கையாடி வருகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அத்தேசம் முன்னேற்றத்தில் தலை சிறந்ததாகத்தரன் இருந்துவந்திருக்கின்றது. இதுபற்றியே தான் லார்ட் மெக்காலே (Lord Macalay) என்னும் பேராசிரியர் 'உலகத்தில் தலை சிறந்து முற்போக்கில் நிற்கும் தேசங்கள் எல்லாம் பிராடஸ்டண்டு (Protestant) மதத்தைச்சார்ந்தனவாகவும், உலகிற்பிற்போக்கிலும் தாழ்மையிலும் இருக்கும் தேசங்கள் முழுதும் ரோமன் கத்தோலிய மதத்தைத்தழுவியனவாயும் இருக்கின்றன' என்றார். இது மிகவும் உண்மையான கூற்று என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ரோமன் கத்தோலிய மதம், மனிதனது அறிவு வளர்ச்சியையும், ஆராய்ச்சியையும் தான் விரும்பும் ஒரேமுறையில் செலுத்துவதால் அவை சுயேச்சையாய் வளரவும் அச்சமற்ற பல செய்கைகள் செய்யவும் இடம் கொடுப்பதில்லை. பிராடஸ்டண்டு மதமோவெனின் எப்பொருள் எத்தன்மைத்தாயினும் யார்யார் வாய்க்கேட்பினும், அப்பொருளின் மெய்ப்பொருளையே காணுதல் அவசியம் என அறிவுறுத்தி, ஒவ்வொரு பொருளையும் தனது தனிப்பட்ட ஆராய்ச்சிக்கும் முடிவுக்கும் விட்டுவிடுவதால் அவன் கட்டுப்பாடின்றி அறிவின் விசாலத்தால்நாட்டிற்பல முன்னேற்ற முறைகளை இயற்றத்தகுதியுடையவன் ஆகின்றான். ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு ஒரு தேசம் மதத்தைப்பற்றிக் கவலையும், கவனமும் இல்லாமல்இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அத்தேசம் முன்னேற்ற முற்றதாகத் தான் இருந்து வந்திருக்கின்றது. ரோமன் கத்தோலிய தேசங்களாகிய ஸ்பெயின், போர்ச்சுகல், முதலிய வற்றையும், அவைகளின் பிற்போக்கான நிலைமையையும், இங்கிலாந்து ஜர்மனி அமெரிக்கா முதலிய பிராடஸ்டண்டு மதத்தேசங்களையும், அவற்றின் அளவற்ற மேன்மையையும் முன்னேற்ற நிலைமையையும் நோக்குபவர்களுக்கு லார்டு மெக்காலேயின் கூற்றின் உண்மை தெளிவாகும். இதற்குக்காரணம் என்ன வென்றால் முதலிற்கூறிய தேசங்கள் சமூக சீர்திருத்தத்தின் மூலம் மதத்தில் தலையிடாமல் இருப்பதும், மற்றவை மதத்தைக்கவனியாது சீர்திருத்தம் செய்து வருவதுமேயாகும். உண்மையான கிறிஸ்துவமதம் அமெரிக்காதேசத்தில் எந்த மூலையில் இருக்கின்றதென க்கண்டுபிடிக்க முடியாது. கவிக்கரசாகிய ரவீந்திரநாதர் கூறியதைப்போல 'கிறிஸ்துவின் 'ஏழைகளே இன்பவாழ்வினர்' என்னும் சொற்களை இப்போது இவ்வமெரிக்கா தேசத்தவர்கள் கேட்பார்களேயானால் அது கிறிஸ்துவேயாயினும் அவரைப்பொருளாதாரத்துவேஷம் உடையவன் என்று நிச்சயமாய்க்கண்டிப்பார்கள். ஆனால்இவ்வாறு அவர்கள் தம் முன்னேற்றத்தையே லட்சியமாகக்கொண்டு மதத்தைப்பொருட்படுத்தாது வந்தால்தான் அவர்கள் இத்தகைய சீரும் சிறப்பும் தலையோங்கி நிற்பச் செல்வத்துடனும், பலத்துடனும் வாழ்கின்றனர். நமது இந்தியர்கள் இவ்வாறு மதப்பேய்பிடித்து மதக்கள் அருந்தி மந்தம்பிடித்துழலுவதால்தான் நாம் இவ்வாறு பிற்போக்கும் தாழ்மையும், உற்ற நிலைமையில் இருந்து வருகின்றோம். ஆகையால் இதுவரையும் நாம் கவனித்து வந்த தேசங்களின் சரிதங்களால் நமது தேசநலனும் சமூக முன்னேற்றமும் என்னவேண்டுகின்றன வென்றால் 'மதநடுநிலை'மையைக் காங்கிரஸ்காரர் கைக்கொள்ள எண்ணி வருவதைப் போல் இல்லாமல் எவ்வப்பழக்கங்களும், வழக்கங்களும் சமூக முன்னேற்றத்துக்குத் தீமையை விளைவிக்கின்றனவோ அவ்வப்பழக்க வழக்கங்களை அவை மதத்திற்கு ஒப்பிய தாகச்சொல்லப்பட்டபோதிலும் அறவேயொழித்துவிட முயலவேண்டுமென்பதேயாம்.

(தொடரும்)

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

நேர்ந்து விடும்? பெண்கள் கருவுற்ற பத்துமாதமும் வேலைசெய்ய முடியாத நிலைமையிலிருக்க மாட்டார்கள். இளமையிலிருந்து நல்ல தேகப்பயிற்சிசெய்து, புஷ்டியான உணவுகளை உண்டு, திடகாத்திரத்துடன் வாழும் பெண்களுக்கு கருவுற்றிருப்பதனால் யாதொரு கஷ்டமுமில்லை. அவர்களுக்குப்பிள்ளை பெறுவதற்கு முன் 51 தினங்களும், பெற்றபின் 15 தினங்களும் ஒய்வு இருந்தால் போதுமானதாகும். பெண்கள் அடிமையானவர்களென்று கருதி அவர்களை அடுப்பங்கரைக்குள் அடைத்துக் கொல்லும், வைதீகர்கள், பண்டிதர்கள் முதலியவர்கள் வீட்டுச்சோறைப் பெண்கள் தான், கருவுற்றுக் கஷ்டப்படுவார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

இதுகிடக்க, பண்டைக்காலத்தில், வீரத்தன்மையுடையவர்களாகவும், நாட்டையாளும் அரசிகளாகவும், போர்க்களம் புகுந்து போர்புரிந்தவர்களாகவும் அனேக பெண்மணிகள் இருந்ததாக — பழங்கதைகளிலும், தேச சரித்திரங்களிலும் சொல்லப்படுகின்றதே இதற்குப் பண்டிதர்கள் என்ன சொல்லுகிறார்கள். இந்த நாளிலும், அனேக பெண் மக்கள் ஆண் மக்கள் செய்கின்ற எல்லாவித காரியங்களையும் செய்யத் திறமையடைந்தவர்களாக இருக்கின்றார்களே இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்?

இதுகாறும் கூறியவற்றால் பெண்களும், ஆண்களும்சமத்துவம்பெற்று வாழ்வதே இயற்கை யென்றும், பெண்களை அடிமைகள் என்றும், சுதந்தரம் பெற்று வாழத்தகுதியில்லாதவர்களென்றும்சொல்லுவதெல்லாம், ஆண் மக்களுடைய அயோக்கியத்தனமும், வஞ்சகத்தனமும், சுயநலத்தனமும், பகுத்தறிவற்ற தன்மையுமென்றே கூறுவோம். ஆகையால், பகுத்தறிவற்ற வைதீகப் பண்டிதர்கள், உலகப்போக்கையும், மக்களுடைய மனோபாவத்தையும் அறிந்து காலத்திற்கு ஏற்ப நடந்து உலகிற்கு நன்மை செய்வார்களாக.

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

1932-ஆவது I. A. No. 203.
1928-ஆவது O. P. No. 18.

பல்லடம் தாலூக்கா எலவந்தி கிராமம் மஜரா வடுகபாளயத்திலிருக்கும் குப்புசாமிக்கவுண்டர் மனைவி முத்தம்மாள்—மனுதாரி.

நோட்டீஸ்.

ஷை O. P. 18|28ல் 8-11-28 தேதியில் மனுதாரி பேருக்கு ஏற்பட்டிருக்கும் வார்சு சர்டிபிகேட்டில் ஷை மனுதாரியின் புருஷர் இறந்து போன குப்புசாமிக்கவுண்டருக்கு 3—1—26ல் ஷை வடுகபாளத்திலிருக்கும் சுப்பராயகவுண்டன் (இறந்தான் மக்கள் மைனர்கள் ராமசாமிக்கவுண்டன் 1, முத்துசாமிக்கவுண்டன் 2, கார்டியன் தாயார் மீனாக்ஷியம்மாள்) எழுதிக்கொடுத்திருக்கும் அசல் ரூ. 100 0-0 பிராம்சரி நோட்டின் அசல் வட்டியில் கூடிய ரூ. 196—0—0 ஐயும் சேர்த்துக்கொண்டு அது நோட்டீஸ் வாய்தா 7—3 32ல் ஏற்பட்டிருக்கிற சங்கதி இதன்மூலியமாய் எல்லோருக்கும் தெரிவிக்கலாயிற்று.

N. கோபால்ராவ், வக்கீல்.
திருப்பூர், 24—2—32.

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இலவசமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்

குஷ்டம் தீராதகர்மரோகமென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்விதக் குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும் சரியான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சரத்மீதே தாமதிக்காமல்அனுபவித்தானந்தப்படுங்கள். நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

சி. ஒ. கேசவவைத்தியர்
Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S. I.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

பிரஜைகள் ஒரு கோடிக்குமேல் இருக்கலாம்! இதுவும் போதாதென நமது காருண்ய அரசாங்கத்தார், மதஸ்தாபன கமிட்டி (Religious Endowment Board) ஒன்றைஏற்படுத்திஅதனால் பல பேருக்குப்பிழைப்புத்தேடி வைத்துளார். இதற்கு நமது மாகாண ஜஸ்டிஸ் கட்சியார் புண்ணியங்கட்டிக்கொண்டார்கள்!! இவ்வளவுபேர் நமது நாட்டுமக்கள் நமது மதங்களால் ஜீவித்துவருகின்றனர். இவர்கள் எல்லோரும் இந்துமார்க்கத்தினர். கிறிஸ்து மார்க்கத்தை எடுத்துக் கொண்டாலும், மகமதியமார்க்கத்தை எடுத்துக்கொண்டாலும் இவ்விரு மதங்களால் பிழைத்துவரும் மக்கள் எத்தனை? கத்தோலியர் கூட்டத்தில் எத்தனைபேர் ஆணும், பெண்ணும் மாதாகோவில் மூலமாகவும், கன்னி மடங்கள் மூலமாகவும் ஜீவித்துவருகின்றார்கள்? பிராடஸ்டண்ட் (Protestent) மார்க்கத்தில் எவ்வளவு பிஷப்ஸ்கள் (Bishops) ஆர்ச்பிஷப்ஸ் (Archbishops) டீகன்ஸ் (Deacons) சாப்டர்ஸ் (Chapters) எல்டர்ஸ் (Elders or Presbyters) முதலியவர்கள் மகமதியமார்க்கத்திலும், மௌலவிகளும், மௌலானாக்களும், காஜிகளும் நிறைந்துள்ளனர். மொத்தத்தில் உலகிலுள்ள 170, 180 கோடி ஜனங்களில் பத்திலொரு பங்கும் மதங்களால் ஜீவனம் புரிந்து வருவதாக எடுத்துக்கொள்ளலாம்! இவ்வளவு பேரும் கற்பனையை வளர்த்தும், ஆதரித்தும், கோடானகோடிமாந்தர்கள் மூடபதிக்யில் தலைமுறை, தலைமுறையாக ஆழ்ந்து கிடந்துவர தங்கள் ஜீவனத்தை நடத்தி வருகின்றார்கள் என்றால் மதங்கள் மிகவும் பொருளாதார நன்மையாக இருந்து வருகின்றதென்று சமுதாயிகள் அதாவது சமதர்மவாதிகள் சொல்வது எவ்வளவு பொருத்தமுள்ளது என்பதுநினைக்கவேண்டி இருக்கின்றதென்பதைப்பாருங்கள்? இவ்வளவு ஆதிக்கத்தையும், செல்வாக்கையும், ஜீவன உபாயத்தையும், மதங்கள் கோடானகோடி மக்களுக்கு அளிப்பதென்றால் மதங்களை ஒழிப்பது லேசான காரியமாகுமா? இவ்வளவும் எந்தக்காரியத்திற்கென்றால், அவ்வித்தை அதாவது மூடத்தனத்தை (Ignorance) வளர்க்கவும் பதுத்தறி வைக்கோல்லவும், என அறிக.

இவ்வளவு அனர்த்தத்திற்கும், உலக அரசுகள், சாட்சி பூதமாக நின்றுகொண்டு 'மதநடு நிலைமை' என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, ஆஷாடபூதி வேஷம்பூண்டு நிலைத்துவருகின்றன. இந்தப்பல்லவியைத்தான் நமது தேச காங்கிரசும் அதன் அதிபதியாகிய காந்தியாரும், பாடுகின்றார்கள். இனியும் பாடவும் போகின்றார்கள்.

மதங்கள் மூடத்தனத்தை வளர்ப்பதென்றால். இவ்வளவு செல்வாக்கும் அதற்கு எப்படி வந்ததென்று கேட்கலாம்? சிலருக்கு ஜீவன உபாயமும், செல்வாக்கும், ஆதிக்கமும் இருத்தலால் மதம் மூடத்தனத்தை வளர்த்து வந்தபோதிலும் அழியாமலிருந்து வருகின்றன என்று அறியலாம்.

ஆதிமதங்களை உண்டாக்கிய மந்திரக்காரனே அரசனுகவாவது அல்லது தலைவனுகவாவது இருந்து வந்தான் அவன் அதிகார ஸ்தானத்தில் வந்த சிற்றரசுகளும், பேரரசுகளும், தாங்களே உலகக்கடவுளெனவும் (Gods on Earth) எண்ணி வந்திருக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டிலும் பலஅரசர்கள் மதகுருமார்களிடமிருந்தே தங்கள் கிரீடத்தைப்பெறுகின்றார்கள். மகுடாபிஷேகங்களில் பிராமணர்களை நமது நாட்டு அரசர்களின் மகுடத்தை ஆசீர்வதித்து அரசன் தலையில் வைக்கிறார்கள். கிரீடத்தை வைக்கும்போதெல்லாம் கிரீடம் தங்களுடையதென்றே சொல்லி அரசன் முடியில் வைக்கின்றார்கள். இன்னும் பலநாடுகளில் பிராமணர்களுக்கே சில அரசர்கள் அடிமைகளெனவே நடந்துக்கொள்கின்றார்கள்.

இன்றைக்கும் அரசன் எந்த மதத்தைச்சேர்ந்தவனே அந்த மதத்தையே அவனது குடிகளும் அனுசரித்துள்ளார். ஐரோப்பாதேசம் முழுமையும் (ரஷ்யாவைத்தவிர) கிறிஸ்துமத அரசர்களாலும், தலைவர்களாலும் (Presidents) ஆளப்பட்டு வருகின்றது. ஆதலின் பெரும்பான்மையான ஐரோப்பியரும் கிறிஸ்துவர்களே.

மதங்களால் மதகுருமார்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மகந்துகளுக்கும் ஜீவனமுண்டு. கோயில்களாலும் அவைகளால் நடக்கும் உற்சவவாதிகளாலும் அனேக கோடி மக்கள் பிழைத்து வருகின்றார்கள். இவர்களை நோக்கி மதங்களை ஒழியுங்களென்றால் இலேசில் ஒழிப்பார்களா? மதங்கள் மனிதருடைய மூடத்தனத்தை வளர்க்கின்றமையால் மூடத்தனத்தைக்கொண்டு பாமரமக்களை பலஅரசர்கள் ஆண்டுவரச்சந்தர்ப்பம் நேரிடுகின்றபடியால் அரசுகளும் மதத்தை ஆதரித்து வருகின்றன. இத்தியாதி ஆதாரங்களைக்கொண்டு பலப்படுத்தியிருக்கும் மதங்களை ஒழிக்கவேண்டுமென்றால் இலேசில் ஆகும் காரியமா? இதனை நமது சுயமரியாதைத்தலைவர்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். 100 வருஷங்களாக மெஞ்ஞானமும், பகுத்தறிவு சங்கங்களும் ஆங்கிலநாடுகளில் உழைத்துவந்தும், மதக்கற்பனைகள் பெரும்பான்மையோரிடமிருந்து ஒழியவில்லை என்றால் நமதுநாட்டில் வைரம் பெற்றிருக்கும் மூடமதங்களைச்சுலபத்தில் ஒழிக்கமுடியுமா வெனச்சிந்திக்கவேண்டும்.

இந்த முக்கிய பிரச்சனையை சரித்திர மூலமாகவும், ஞாயமூலமாகவும் விசாரித்து அறிந்த முடிவு என்னவெனில் அரசுகள் மதப்பற்றை ஆதரிக்கும்வரை மதங்கள் நமது நாட்டைவிட்டு ஒழிவது முடியாதகாரியமே. நாஸ்திகம் தழைக்கவேண்டுமானால் அரசும் நாஸ்திகத்தைத்தழுவவேண்டும். இரண்டாவது அப்படி அரசியலே நாஸ்திகமாக மாற்றிக்கொண்டாலும் நற்காலம் வாழும் மக்கள் பெரும்பான்மையோர் நாஸ்திகமாவது கஷ்டம், ஆனால் நமது நோக்கத்தை நமது குழந்தைகள்பால் செலுத்தவேண்டும். இனிவரும் சந்ததியாரை நாஸ்திகத்தில் வளர்க்கவேண்டும். அதற்கு நமது வீடுகளிலும், நமது பள்ளிக்கூடங்களிலும், நமது கல்விச்சாலைகளிலும் மூடத்தனத்தை உண்டாக்கும் மதத்தை நீக்கி, நாஸ்திகம் என்று சொல்லப்படும் சமதர்மக்கொள்கைகளை கற்பிக்கவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம்தான் வருங்காலத்திலாவது நமது மக்களைச்சமதர்மக்கொள்கையுடைய பிரஜைகளாகச்செய்யமுடியும்.

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

1928-வரு அசல் நெ. 63.
1931-வரு நி. மனு நெ. 2307.

நாச்சிமுத்துக்கவுண்டன்-வாதி.

பல்லடம் தாலூகா கரைப்புதூர் கிராமம் குன்னுங்கல்பாளையம் நல்லாக்கவுண்டன் மகன் சின்னியகவுண்டன்—பிரதிவாதி.

மேற்படி பிரதிவாதிக்கு,

மேல்வாதி அடமான சொத்துக்களின் விற்பனைக்காக மனு செய்து கொண்டிருப்பதால் இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 7—3—32 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. என்கிற சங்கதி இதனால் உமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

M. K. கோவிந்தராஜலு
செட்டியார், வாதி வக்கீல்.
திருப்பூர், 14—2—32.

சப்-ஏஜண்டுகள் தேவை.

சிலோனில் முக்கியமான ஊர்களிலும் கொளும்பு எல்லா பக்கங்களிலும் "குடி அரசு", "புது வை முரசு", "தமிழன்", "சண்டமாருதம்", "குமரன்" வாரப்பதிப்பு (மாதப்பதிப்பு) "சன்மார்க்கன்" மாதப்பதிப்பு, "போர் முரசு" "சுதந்தர முரசு" ஆகிய பத்திரிகைகளை விற்பனை செய்ய சப்-ஏஜண்டுகள் தேவை. விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசங்களுக்கு எழுதுக. மேல்கண்ட பத்திரிகைகளின் வாசகநேயர்களும் இதைக்கவனிக்கவேண்டுகிறோம்.

விலாசம்:—
A. S பரமசிவம்,
46, காலி ரோட், பம்பலபிட்டி.,
கொளும்பு.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக்கொள்ளுங்கள்
பூவிழல் !!
கண்ணில் பூவிழுந்து பார்வையைத்தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.
செவிடு !!
பாதி அல்லது முழுவதும் செவிடாகயிருந்தால் கூடப்பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.
விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.
"Sri" Works,
Beadon St. P. O. Calcutta.

மஞ்சள் ஆவாரம்பூ பானத்தூள்
ALWAYS DRINK YELLOW AVARAMBU HEALTH BEVERAGE.

எல்லோர்களும் ஏற்றுக்கொண்ட ஒரே சிலை.
ஓ, காப்பிக்குப்பதிலாக சாப்பிடவும்.
C V பாண்டியா & கோ.
16-17 சகின் ஹவுஸ் பீச்சு, மதராஸ்

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம்	...	0—8—0
2.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்	...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது)	...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட்	...	2—0—0
9.	மோட்டார்கார் இயக்கிற சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். தூர்—ருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.)	...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் —	...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த தூர்ட்ருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. தூர்களுக்கு யாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி விருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களிடமிருந்து

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

இம்பிரியல் பிரஸ், மாயவரம்


'சண்டமாருதம்'
சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.



Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House,
Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

"தமிழன்"
மலாய் நாட்டு சுயமரியாதை
தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா		$ 1.00.
வெளிநாடு ,,	இந்தியா	$ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அற்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், சிப்போர்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கைலக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால எழுதப்பட்ட கட்டுரை ஞானத்தொகுத்து வெளியிடப்பட்டது. இதைட்டுனாகளைப்படிப் பதால் ஆனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள வழல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைதனின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித் தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரி யும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறாம் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம, மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஸ்ரீ பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான...சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணை 0—2—0.

சுயமரியாதைத்தப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கென கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணபெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுளளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணன கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் பாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0.

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராச வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால கதாப் புரட்டை உணர லாம்.

இதன் விலை அணை 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் 'குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். தனல் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் அச்சியந்திரத்தில் அச்சிடப்பட்டு திரும... ...மையான அவர்களால் வெளியிடப்பட்டது.